விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஐப்பசி 4உ ஞாயிறு (20-10-68) றஜப் 27 புத்தகம் 23 இதழ் 2




## 1016 தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வயிற்றிலடிக்க முடிவு

## செய்துள்ள தேசிய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவருக்கு

# தமிழ்ப் பகுதியில் வரவேற்பா?

## இ. போ. ச. விலும் எல்லாம் சிங்களம்!

இலங்கைப் போக்குவரத்து சபையிலும், சர்வம் சிங்களம் என்ற கொள்கை தீவிரமாக்கப்பட்டு வருகிறது, இதுவரை காலமும் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருந்த பெயர்ப்பலகைகள் அறிவித்தல்கள் யாவும் திடீரென தனிச்சிங்களத்துக்கு வேகமாக மாற்றப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சிங்களம் தெரியாத பஸ் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமடைந்துவருகின்றனர்.

அனுராதபுரம் டஸ் தரிப்பு நிலையத்தில் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருந்த அறிவிப்புகள் நேரசூசி, பெயர்ப்பலகைகள் யாவும் இப்போது தனிச்சிங்களமாகிவிட்டன. அனுராதபுரம் பஸ் நிலையம் பல்வேறு இடங்களுக்குச் செல்லும்

(9-ம் பக்கம் பார்க்க)

## சுகாதார மந்திரி யாழ் விஜயம்: பகிஷ்கரிக்க தமிழரசார் முடிவு!

இம்மாதம் 22-ம்திகதி வடபகுதிக்கு சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா விஜயம் செய்து பங்குபற்றும் எவ்வித வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வதில்லையெனவும் எவ்வித வரவேற்பும் அளிப்பதில்லையெனவும் தமிழரசு எம். பீக்கள் முடிவுசெய்துள்ளதாக தெரிகிறது.

தமிழ்பேசும் மக்களுக்கு பாதகமான பல நடவடிக்கைகளில் தேசிய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதால், தேசிய அரசாங்க அமைச்சர் ஒருவரை தமிழ்ப்பகுதியில் வரவேற்பது தமிழ் மக்களின் தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் என்றும் இதனாலேயே சுகாதார அமைச்சரின் விஜயத்தை தாங்கள் பகிஷ்கரிக்க இருப்பதாகவும் தமிழரசு எம். பீ. யொருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## கறுப்புக் கொடி பிடிக்க இளைஞர்கள் மூஸ்தீபு?

அதே வேளையில் சுகாதார அமைச்சர் செல்லும் இடங்களில் எல்லாம் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர் குழுவொன்று ஏற்பாடு செய்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

சுகாதார அமைச்சருக்கு கறுப்புக்கொடி பிடிக்கவும் இவர்கள் ஏற்பாடு செய்து வருவதாகவும், ஆனால் கறுப்புக்கொடி காட்டுவதை தமிழரசுத் தலைமைப்பீடம் இப்போதைய நிலையில் விரும்பவில்லையென்றும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் சுகாதார அமைச்சருக்கு தமிழ் காங்கிரஸ் எம்.பீ.க்கள் வரவேற்பளிக்க இருக்கிறார்கள். யாழ். எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நண்பகல் விருந்தும், உபசபாநாயகர் இரவு விருந்தும் அளிக்கஏற்பாடு செய்து வருவதாக சொல்லப்படுகிறது.

அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்துவரும் தமிழ் இளைஞர்கள், 1016 தமிழ் அரசாங்க ஊழியர்களின் வயிற்றிலடிக்க திட்டமிட்டுள்ள ஒரு அரசாங்கத்தின் அமைச்சருக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு அளிப்பதாஎன்று கேட்கிறார்கள்.

## "அறிஞர் அண்ணா கைவிட்டது பிரிவினையைத்தான்; சமஷ்டியை அல்ல"

### ஜீ. ஜீ. க்கு தமிழரசுப் பிரமுகர் சுடச் சுடப் பதில்!

**"இந்தியாவில் அறிஞர் அண்ணா திராவிட நாடு கொள்கையை கைவிட்டதுபோல இலங்கையிலும் தமிழரசுக் கட்சி சமஷ்டியை கைவிட வேண்டுமென்ற ஜீ. ஜீ. யின் வாதம் பொருத்தமற்றது; பொருளற்றது. இது அவரது அரசியல் ஞான சூனியத்தையே காட்டுகிறது"**

இவ்வாறு தமிழரசுப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள திரு. ஜனார்த்தனத்திடம் இந்தியாவில் அண்ணா திராவிட நாடு கொள்கையை கைவிட்டதுபோல இலங்கையிலும் சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக் கட்சி கைவிட வேண்டும் என்றுதிரு பொன்னம்பலம் கூறியிருந்தது பற்றி அபிப்பிராயம் கேட்டபோது மேற்கண்டவாறு கூறிய அப்பிரமுகர் மேலும் சொன்னதாவது:—

"திரு. பொன்னம்பலம் இந்திய அரசியலைச் சரிவரப் புரிந்து கொள்ளாது வெளியிட்ட இக்கருத்தைக் கேட்டு திரு. ஜனார்த்தனம் கூட பரிதாபப்பட்டிருப்பார்.

"இந்தியாவில் சமஷ்டி ஆட்சி அமைப்பே நடைமுறையிலிருக்கிறது. அதன்கீழ் தமிழகமும் தனிமாநிலமாக தனி உறுப்பு அரசாக விளங்குகிறது.


"சமஷ்டியின் கீழ் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் போதுமானதாக இல்லாததால்தான் அண்ணா திராவிடநாடு கோரினார்.

"ஆனல் திராவிட நாடு கோரிக்கையைக் காரணமாக வைத்து பிரிவினைத் தடைச்சட்டத்தைகொண்டு வந்ததன் மூலம், தி. மு. க. என்ற ஸ்தாபனத்தையே அழித்துவிட திட்டம் தீட்டியது டெல்லி அரசு. இந்த வலையில் சிக்க மறுத்த அண்ணா திராவிட நாடு கொள்கையை கைவிடுவதாக அறிவித்தார்.

"திராவிட நாடு கொள்கையை அண்ணா கைவிட்டாரே தவிர, மாநில சுயாட்சிக்கொள்கையையோ, மாநிலங்களுக்கு மேலதிக அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டுமென்ற தனது இலட்சியத்தையோ அவர் கைவிட்டதில்லை. அண்ணா கைவிட்டது பிரிவினையைத்தான்: சமஷ்டியை அல்ல! முன்னைவிட அதிக உறுதியுடன் பூரண மாநில சுயாட்சிக்காக உழைத்து வருகிறார்.

"இலங்கையில் தமிழரசுக் கட்சி கோருவது அண்ணாவும் ஏற்றுக் கொண்டுள்ள சமஷ்டிக்குட்பட்ட மாநில சுயாட்சிதான். இதைப் புரிந்து கொள்ளாது திராவிட நாடு கொள்கையை தி. மு. க. கைவிட்டதுபோல தமிழரசாரும் சமஷ்டியைக் கைவிடவேண்டுமென்று ஜீ. ஜீ. கூறுவது மொட்டந்தலைக்கும் முழங்

(9-ம் பக்கம் பார்க்க)




கிணற்றுள் ஒருபோதும் துப்பாதே..........!

## இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழிலக்கிய அறிவு தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அவசியம்!

## பெறுவது, தருவது என்ற ரீதியில் வளர்ச்சி ஏற்பட வேண்டும்!

(சென்றவாரத்தொடர்ச்சி)

தற்காலத் தமிழ் எழுத்தாளர்களில் பலருக்குப் பழந்தமிழ்இலக்கியப்பயிற்சி மட்டுமல்ல— (எந்த மொழியிலும்) வெறும் இலக்கியப் பயிற்சியே இல்லாததால் நல்லஅடிப்படையும்எழுத்து நடையும் வரமாட்டேனென்கிறது. நடையும், கருத்தாழமும் உள்ள புதுமைப் பித்தன், கு. ப. ரா. போன்றவர்கள் எல்லாம் ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியுள்ளவர்களே. அதனுல் தான் அவர்களால் அர்த்த பாவம் நிரம்பிய விதத்தில் எழுத முடிந்தது.

இப்போது எழுதும் தமிழ் எழுத்தாளர்களில் பலருக்கு அர்த்தபாவம் என்பதே தெரிவதில்லை. தமிழகத்தின் மிக மிகப் பிரபலமான நாவலாசிரியர் ஒருவர்,

'போலீஸ்காரன் திருடனை 'அழைத்துக் கொண்டு'— போனுன்—என்று எழுதியிருப்பதைச் சமீபத்தில் படித்தேன். 'அழைத்துக் கொண்டு' என்பது சுமுக பாவம். அதைப் பயன்படுத்த வேண்டிய இடம்,

'திருமணத்திற்கு அழைத்துக்கொண்டு போனுன்'

'விருந்துக்கு அழைத்துக்கொண்டு போனுன்' என்பன போன்றவை. 'போலீஸ்காரன் திருடனை இழுத்துக் கொண்டு போனுன்' என்று எழுத வேண்டியதைப் 'போலீஸ்காரன் திருடனை அழைத்துக்கொண்டு போனுன்' என்று எழுதுவதும், 'திருமணத்திற்கு இழுத்துக் கொண்டு போனுன்' என்று எழுதுவதும் எத்தனை ரஸபேதமாயிருக்கிறது பாருங்கள்.

மொழியின் நுணுக்கங்களை என்றே தேடி ஒரு 'லிங்விஸ்டிக் மாணவன் படிப்பது போலப் படிக்காமல் இலக்கிய நோக்குடன் மட்டும் படித்தால்கூட இலக்கியப் பயிற்சி ஒருவனை நல்லநடை எழுதப் பழக்கப்படுத்திவிடுகிறது அல்லது மோசமான நடை எழுதுவதைத் தடுக்கவாவது செய்கிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகஎழுதிப்புகழ்பெற்ற தமிழ் மக்களின் அபிமான நாலாசிரியரின் நாவலிலே இப்படி ஒரு வாக்கியத்தைப் பார்க்க முடிகிறதென்ருல் என்ன சொல்வது?

"வைகல் எண்தேர்
செய்யும் தச்சன்
திங்கள் வலித்த
காலன்னேனே"

என்று புறநானூற்றில் அதிகமானை ஔவையார் புகழ்ந்தபாட்டில் இலக்கியத்தில் சொற்ளெடுட்பு முறையைக் கருத்திஞலும் சொல்லியமுறையிஞலுமே விளக்கியிருக்கிருர். இப்படி ஒரு செறிவு வசனத்திற்கும் வேண்டும். பழந்தமிழ் இலக்கியப் பிரக்ஞை அதற்கு உதவும் என்று ஒவ்வொரு தற்காலத் தமிழ் எழுத்தாளனும் நம்ப வேண்டும்.

ஒரு காரை ஓட்டுபவனுக்கு ஸ்டியரிங், ஆக்ஸிலேடர், ளச்பெடல், பிரேக்பெடல், எல்லாம் எங்கெங்கே இருக்கின்றன என்பது நிச்சயமாகத் தெரிந்தே ஆக வேண்டியிருப்பது போல் வாக்கியம் எழுதுகிறவனுக்கு வாக்கியத்தை வடிவுபடுத்தும் வகை, துரிதப் படுத்தும் விதம், நிறுத்தும் வழி, எல்லாமே மொழிப் பயிற்சியோடு தெரிந்திருக்க வேண்டும். இன்ருே தமிழில் வாக்கியம் எழுதத்தெரியாதவர்கள் கவிதையும், கவிதை எழுதத் தெரியாதவர்கள் மகாகாவியமும் துணிந்து எழுதிக் கொண்டிருக்கிருர்கள்.

தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுக்குப் பழந்தமிழ் இலக்கியப் பிரக்ஞை மட்டுமல்ல, எந்த இலககியப் பிரக்ஞையுமே இல்லாதது கவலையளிப்பதாயிருக்கிறது. நாம்தான் 'வாஷிங்டனில் திருமணங்களையும்' 'லண்டனில் சாந்திமுகூர்த்தங்'களையும், மைலாப்பூர்க் குளத்தில் ஸோபியாலாரன் குளிப்பதையும் எழுதி அபாரப் புதுமைகளைப் படைத்துவிட்டோமே? நமக்கு எதற்கு இலக்கியப் பிரக்ஞை என்கிறீர்களா? அப்படிக் கேட்டுப் பயனில்லை. மலையாளிகளுக்கும், வங்காளிகளுக்கும் அவர்களுடைய சில நூருண்டு வரலாறே உள்ள மொழியின் பழைய இலக்கியங்களில் உள்ள பிரக்ஞை கூட மிகத் தொன்மையான வரலாறுள்ள தமிழ் எழுத்தாளனுக்குத் தன் மொழி இலக்கியங்களில் இல்லை என்ருல் அது கேவலம்தான்.

### நா.பார்த்தசாரதி

இனிமேல் தற்காலத்தமிழ் எழுத்தாளர்களிடம் உள்ள நயங்களைக்காணலாம். இலக்கியத்துறையின் தெளிவான, உலகளாவிய, எளியவடிவங்களான சிறுகதை, நாவல், மேடை நாடகப் புதுமைகள், எல்லாம் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

#### பயன்படும்

பழந்தமிழ் இலக்கியப் பிரக்ஞை இவற்றுக்கு நல்ல அழுத்தமும் ஆழமும் கொடுப்பதற்குப் பயன்படும் என்பது என் துணிவு. பழம் பண்டிதர்கள் வெறுத்தாலும் வசனயுகத்தில் இந்த எளிய வடிவங்களே இலக்கிய அந்தஸ்தை அடையத் தக்கவை. பழந்தமிழ் இலக்கியப் பிரக்ஞை அறவே இல்லாதவர்கள் இவற்றில் நிறைய ஈடுபட்டிருக்கிருர்களே என்பதே பண்டிதர்களின் காழ்ப்பிற்குக் காரணமாயின் அவற்றைப் பயமுறுத்தலுக்காக விட்டுக் கொடுக்காமல், அவசியத்துக்காக விட்டுக்கொடுத்து முழு வெற்றிபெறலாம் தற்காலத் தமிழ் எழுத்தாளர்கள்.

புதுமையின் மேல் தீண்டாமை மிகுந்த சிறு பழைய தலைமுறை நாளை அல்லது நாளன்றைக்கு நிச்சயமாக மறைந்துவிடும். ஆனுல் அதற்கு அர்த்தம் பழமையின் மேல் தீண்டாமையுள்ளவர்கள் பெருக வாய்ப்பிருக்கிறது என்பதல்ல. பழமை இலக்கியங்களை நாம் கற்கும் வாய்ப்பு என்றும் ஓர் அவசியமாகவே நிற்கும்.

#### ஆதார நிலம்

மண்ணின் பழமையை நினைத்து அதன்மேல் நாம் பயிரிடாமல் இருந்துவிடுவதில்லை. உரமிட்டும் பண்படுத்தியும் நீரிட்டும் பயிரிடவில்லையா? அதுபோல் ஆதாரமான மொழிநிலம் பழையதாயிருந்தாலும் அதைப் பயிரிட்டு வளர்க்க நாம் தயாராயிருக்கவேண்டும். ஆதார நிலமே இன்றிப் பயிரிடமுடியாது.

பழைய தமிழ் இலக்கியத்திஞல் ஆகிய முழு நன்மைகளையும் தற்காலத் தமிழ் எழுத்தாளர்கள் அடைய வேண்டும் என்ற ஆசையிலேயே இதனைச் சொல்கிறேன். புதுமையை வெறுப்பவர்களின் தீண்டாமையும் போக வேண்டாமா என நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. அப்படி வெறுப்பவர்கள் புதிய காலத்திலேயே நம்மோடு வாழ்பவர்களாதலால் அவர்களாகவே மாற வாய்ப்புண்டு, அல்லது அழிய வாய்ப்புண்டு.

பழந்தமிழ் இலக்கியத்தில் பிரக்ஞை வேண்டுமென்றேனே தவிர நாவலில் நாவலுக்குச் சம்பந்தமில்லாமல் காதலன், காதலி, வேலைக்காரன், எல்லாரும் குறள் பேசிக்கொண்டிருக்கச் செய்வதற்காகப் பழந்தமிழ் படிக்கச் சொல்லவில்லை. குறளை நமக்காகப் படிப்போம். கதையைக் கதைக்காகப் படைப்போம். தமிழை மொழிக்காகப் படிப்போம் இலக்கியத்தை இலக்கியத்துக்காகப் படைப்போம்.

பெறுவது, தருவது என்ற அடிப்படையில் தமிழ் எழுத்தாளர்களின் தற்கால வளர்ச்சி இருக்கவேண்டும். தருவது மட்டுமே இருந்தால் வறண்டுபோகும். பெறுவது மட்டுமே இருந்தால் வெறும் மேதாகர்வம்தான் மிஞ்சும். இரண்டும் கலந்த எதிர்காலமே தற்போதைய தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கு வாய்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் நான்.

---

## தீவுப் பகுதி எம்.பி. மீது கண்டனம்!

"தீவுப்பகுதி எம். பி. கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை மனப்பூர்வமாக ஆதரிக்கிருேம். இன்று வரை அவர் தொடர்ந்து பதவி வகிப்பதைக் கண்டிக்கிருேம். கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் தேர்தல்கால வாக்குறுதிகளுக்கும் முரணுகத் தீவுப்பகுதி எம். பி. நடந்து கொள்வதால் இவர் தமது பதவியை ராஜிஞமாச் செய்து தேர்தலில் நிற்க வேண்டும்."

சரவணை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய முன்றலில் திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற தமிழரசு ஆதரவா[illegible] மானிக்கப்பட்டுள்ளது.

---

## கவிதைப் பூங்கா

## காரணம் என்ன?

—ரவி—

வட்டக் கருவிழி தொட்டுச் சுழன்றிட
வஞ்சியள் நின்றனளே— மயல்
நெஞ்சினில் தந்தனளே!— தமிழ்
தத்தும் இதழ்தொட முந்தும் மனத்தினை
வெட்டி முறித்தனளே!—அயல்
எட்டிப் பறந்தனளே!

★

நூலைத் தொடுமிடை ஆளையே கொன்றிட
சாலையில் வந்தனளே!—நெஞ்சில்
வேலையும் தந்தனளே—நடை
மானைப் பழித்திட நாணைப் பிடித்தவள்
மண்ணினில் விட்டனளே!—நெஞ்சைக்
கண்ணிஞல் தொட்டனளே!

★

காதல் விளைத்திடு பாதி விழிமலர்
சாதலை இட்டனளோ?— இல்லை
நோதலை விட்டனளோ?
உள்ளிப் பெருகிடும் வெள்ளக் கனவுக்கும்
காரணம் என்னதுவோ?—முடிவு
பூரணம் ஆனதுவோ?

---

## தமிழா நீ செத்துப்போடா!

—செ குணரத்தினம்—

தமிழாநீ ஈழநாட்டில் பிறந்ததேனே?
தவறுதலாய் வந்துதித்து வாழ்கின்ருயோ?
தமிழரது தேவைகளை உணராநாட்டில்
தமிழாநீ வாழாமல் செத்துப் போடா!

★

இன்றுவரும் நாளைவரும் நமக்கு நல்ல
எதிர்காலம், என்றெண்ணம் இனியும் வேண்டாம்!
இன்றென்ன நாளையென்ன என்ருே ஓர்நாள்
இறப்பதுமெய் எதிர்த்தெழுந்து செத்துப்போடா!

★

நாமழிந்தால் நம்தமிழும் அழிந்தாபோகும்?
நாளைவரும் சமுதாயம் நம்மைப் பார்த்துக்,
காறி உமிழ்ந்தேசாமல், தமிழாம் அன்னை
கண்ணீரை விடுமுன்பே செத்துப்போடா!

★

எம்மினத்தோடிரக்கமில்லா மனிதர் கூட்டம்
ஈழவள நாட்டினிலே இருக்கு போது
நம்மனது மகிழ்ந்திடவா செய்யும்? இன்றே
நல்லதைநீ செய்துவிட்டுச் செத்துப்போடா!

★

இந்நாட்டில் இரத்தாறு ஓடிஞல்தான்
எம்கொடுமை தீருமென விதியிருந்தால்
செந்தமிழா உன்திறமை உலகம்காண
செருக்களத்தில் சென்ளுருக்கால்
செத்துப்போடா!

---

## உணர்ச்சி

எம். எச். எம். அஷ்ரப்

அன்றங் கெழுந்தாடிய வது
இனறெங் கெழுந்தோடியதோ!
சிறு பிழை சேய் செய்தவுடனேயே
சித்னதால் பொங்கும் தாதை
கண்ணே மணியே கற்கண்டெனப் பின்னர்
கட்டித் தழுவுகின்ருரெனின்

அன்றங் கெழுந்தாடிய வது
இன்றெங் கெழுந்தோடியதோ!
நடக்கையில் நிறுத்தி மனிதனை
நையப் புடைத்திட்டுப் பின்னுள்ளக்
கிடைக்கையில் பங்கு கொள்ளவவனைக்
கிடத்தும் மனித வாழ்வினிலே

அன்றங் கெழுந்தாடிய வது
இன்றெங் கெந்ழுதோடியதோ!
மண்குழி தனை நோக்கி மனையாள்
மறுவுலகு செலும் போதினிலே
கண்சிவக்க அழும் கணவன் தன்
கரத்தில் நாளைவேருருத்தியெனின்

அன்றங் கெழுந்தோடிய வது
இன்றெங் கெழுந்தோடியதோ!
படைக்களத்தினிறகே தலைவன்
பரியேறிச் சென்ற பின்னரங்கே
நடைப்பிணமாகு நல்லாள் பின்
நம்பியைக் கண்டு சிரித்தாளெனின்
அன்றங் கெழுந்தாடிய வது
இன்றெங் கெழுந்தோடியதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என். பாலசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: எனது வயது 70. நான் இளமையை அடைய ஒரு வழி சொல்லுங்களேன்!

ப: யூகோஸ்லேவியா நாட்டிலுள்ள களதாஞ் என்னும் இடத்தில் ஒரு நீரூற்று இருக்கிறதாம. அதற்குப் பெயர் 'முஸ்காவோடா' அந்த நீர் ஊற்றில் வரும் தண்ணீரை எடுத்துப் பருகினுல், மீண்டும் வாலிப முறுக்கு வந்து விடுமாம். மேல் நாடுகளில் இத்தண்ணீருக்கு இப்போது ஏகப்பட்ட கிராக்கியாம்!

கே: மினிஸ்கேர்ட்டுக்குவந்துள்ள இக்காலக் குமரிகளின் உடையலங்காரம் இனி எப்படியாகும்?

ப: டொப்லெஸ், பொட்டம் லெஸ் ஆகி ஈற்றில் ஆபிரிக்க காப்பிலிகளின் 'பாஷனுக்கு' வந்து விடும்!

ஃ

எஸ். சண்டே,
திருமலை.

கே: ஜீ. ஜீ. தமிழ்அரசுக்கட்சியில் இருந்தால் என்ன நடந்திருக்கும்?

ப: தமிழரசுக்கட்சிதமிழ்மக்களின் அன்பை இதுவரை இழந்திருக்கும்!

ஃ

கே. எஸ். கைலாஸ்,
கரதண்டம்.

கே: வேர்ணன்அபயசேகராவுக்குப்பின் அரசாங்க அதிபர் ஆக வட மாகாணத்திற்கு நியமிக்கப்படவிருந்த ஹுடுகின்ஸ் பதவியேற்காது ஏன் ஒய்வுபெற விரும்புகிருர்?

ப: வடக்கில் அரசாங்கவேலைகள் எல்லாம் தமிழில் நடக்க வேண்டுமென்ற துடிப்பு பொங்கி யெழுந்துள்ள நேரத்தில் தமிழ் தெரியாமல் அங்கு செல்ல அவர் அச்சப்பட்டிருக்கலாம்!

கே: சமஷ்டிக் கட்சி தலைவர்கள் நாம் கேட்கும் எவ்வித கேள்விக்கும் பதில் தருகிருர்கள். தனிப் பெருந் தலைவரும் சிதம்பரங்களும ஏன் கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதில்லை?

ப; பதில் இருந்தாலல்லவா கொடுப்பதற்கு?

ஃ

எம். எஸ். ஜெகநாதன்,
மட்டக்களப்பு.

கே: தனிப்பெருந்தலைவரை எட்டப்பனுக்கு ஒப்பிடலாமா?

ப: ஒப்பிட்டால் தனிப்பெருந்தலைவரைவிட எட்டப்பன் நல்லவன் ஆகி விடுவானே!

ஃ

கந்த ஞானமுத்து,
கைதடி தெற்கு.

கே: தமிழன் தலைநிமிர்ந்து தரணியில் வாழ வேண்டுமானுல் அவன் என்னசெய்ய வேண்டும்?

ப: பேச்சைக் குறைத்துச் செயலைக் கூட்ட வேண்டும்!

கே: தற்போதைய நிலையில் தமிழரசு - தமிழ்க்காங்கிரசுக் கிடையில் ஒற்றுமை நிலவுமானுல்......?

ப: வானத்தைக் கயிருகத் திரித்துவிட முடியாது!

ஃ

அ. சம்சோன்,
றெக்கிளமேசன்.

கே; தமிழரசை இழந்த ஐக்கிய தேசியக் கட்சி இனி என்ன செய்யும்?

ப: மீண்டும் அரசியல் அஞ்ஞாத வாசத்துக்குப் போக வேண்டியதுதான்!

கே: நான் ஒருபள்ளிமாணவன். எனக்கு அரசியல் தேவைதானு?

ப: அரசியல் அறிவு வேண்டும்; ஈடுபாடு கூடாது!

கே: கோணேசர் ஆலய விவகாரத்தில் டட்லி சேனநாயக்காவின் மனமாற்றம் சிங்கள அரசியல் வாதிகளின் மிரட்டலால் ஏற்பட்டதா? அல்லது அவரது தீர்க்கமான முடிவினுல் ஏற்பட்டதா?

ப: சிங்கள அரசியல் வாதிகள்-பௌத்த பிக்கு மிரட்டலால்!

ஃ

க. ஜெயானந்தன்,
மாதகல் வடக்கு:

கே: மனிதன் நிரந்தரமாகத் தேடிக்கொள்ள வேண்டியது எதை?

ப: உயிரை!

கே: வாழ்க்கை சிலருக்கு கசப்பதேன்?

ப: பலருக்கு அது இனிப்பதால்!

ஃ

'தமிழ் மாறன்'
அக்கரைப் பற்று.

கே: தேர்தல் அண்மையில் நெருங்க பொன்னம்பலம் கோஷ்டியினர் ஒற்றுமைக் குரலெழுப்புவதன் மர்மமென்ன?

ப: தேர்தலில் ஏதாவது ''இலாபம்'' கிடைக்காதா என்ற ஆசைதான்!

ஃ

வே. குலேந்திரன்,
சங்கானை.

கே: ஆலயக் கதவுகளைப் பூட்டி வைப்பதால் மத நம்பிக்கை குறைவுபடாதா?

ப: குறைவுபடாது! மத நம்பிக்கை என்பது ஆலயத்துக்குச் செல்வதால் மட்டும் ஏற்பட்டுவிடுவதல்ல!

கே: நீர் ஒரு ''அரைச் சைவர்'' என்று எனது நண்பன் ஒருவர் சொல்லுகிருர் இது உண்மையா?

ப: அப்படியானுல் உங்கள் நண்பர் முழு ''சைபர்'' தானு!

ஃ

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: உலகத்தில் சிறந்தது எது?

ப: ஏழையின் சிரிப்பு!

கே: திருமணம் என்பது என்ன?

ப: ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் உடற்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சமூகம் வழங்கும் ''லைசென்ஸ்''!

ஃ

கோசலநாதன்,
முல்லைத்தீவு.

கே: பணம் வேண்டிவிட்டு திருப்பிக் கொடுக்க மறுக்கும் கயவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

ப: இக்காலத்தில் பணம் கொடுப்பவன் தான் கயவன். பணம் வாங்கி விட்டு திருப்பிக் கொடுக்க மறுப்பவனே 'யோக்கியன்'!

கே: வவுனியா எம். பி., ஜீ. ஜீ.க்கு தங்கப் பவுண் மாலைபோட்டதுபோல தனக்கு வவுனியா தொகுதி மக்கள்போடுவார்கள்என எண்ணுகிருராம். அது கனவாகுமா அல்லது நனவாகுமா?

ப: தனக்குப் போட்ட தங்கப்பவுண் மாலையைக்கொண்டு தொழிற்சாலை அமைக்கப்போவதாக கூறினுர் பொன்னம்பலம். தொழிற்சாலை அமைத்து[illegible] கூறிவிட்டு ஏமா[illegible] பாடம் படிப்பிக்க அடுத்த தேர்தல்வரை காத்துக்கொண்டிருக்கிருர்கள் யாழ்தொகுதி வாக்காளர்கள். வவுனியா பா. உ.க்கும் தோல்வி மாலையைத் தயாராக்வைத்திருக்கிருர்கள் வவுனியா மக்கள்.

ஃ

பொ. கலைச்செல்வி:
ஏழாலை மேற்கு.

கே: இத்தனை காலமாக மாகவும் தன் புழுகுகள் தமிழ் மக்களிடம் பலிக்காததை அனுபவபூர்வமாக அறிந்திருந்தும், ஏன் இன்னும் விடாப்பிடியாகப் புழுகிக் கொண்டேயிருக்கிருர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்?

ப: கோயபல்ஸ் என்ற கோணிப் புழுகனுக்கு ஒரு வாரிசு வேண்டாமா? அதற்காகத்தான்!

கே: தமிழ் காங்கிரஸ் தலைவருக்கும், உபசபாநாயகருக்கும் ஏதாவது தகராறு உண்டா?

ப: அதை ஏன் கேட்கிறீர்கள்? கட்சிக்குள் இருவருக்கும் நடந்த பலப்பரீட்சை இப்போது முற்றி வெடிக்கும் நிலைக்கு வந்துவிட்டதாக கூறப்படுகிறதே!

ஃ

அன்ரன் மனுவல்பிள்ளை,
கொழும்பு-15.

கே: தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இயங்கும்தமிழ் தினசரிகளை எந்தவிதத்தில் தமிழர்களாகிய நாங்கள் பகிஷ்கரிக்கலாம்?

ப: அத்தகைய தினசரிகளை வாங்காமல் விடுவதே அதற்கு ஒரே வழி. ஆனுல் அதற்குமுன் தமிழுரிமைக்காகப் போராடுவதற்கென தமிழ் தினசரி ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும்!

கே: சுதந்திரனை ஒரு நாளாந்தப் பத்திரிகையாக்கினுல் என்ன? தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரே பத்திரிகை சுதந்திரன் தான்!

ப: நல்ல யோசனைதான்: எதற்கும் காலம் கனிய வேண்டாமா?

ஃ

''தியாகு''
நாவல் நகர்

கே: வடக்கில் தந்தைசெல்வாவும், பொன்னரும்இணைந்தால், தெற்கில் டட்லியும், ஸ்ரீமாவோவும் இணைவார்களா'

ப: அரசியலில் நிறைவேற முடியாதவற்றை கற்பனை செய்வது எனது வழமையில்லை!

ஃ

''திருநிறை செல்வி''
ஓமந்தை

கே: நான் செய்த குற்றத்தை அதுகுற்றம்தான்என்று ஒப்புக்கொள்ள மனம் மறுக்கிறதே: இந்த மனப்பான்மையை மாற்றுவது எப்படி?

ப: உங்கள் மனம் ஒப்புக் கொள்ளாதபோது நீங்கள் செய்ததை 'குற்றம்' என்று எப்படி உணர்ந்துகொண்டீர்கள்?

ஃ

சுப்பிரமணியம்,
மட்டக்களப்பு.

கே: திரு. பொன்னம்பலம் ஒற்றுமை ஒற்றுமையென்று அலற ஆரம்பித்துள்ளாரே?

ப: ஆமாம், தேர்தல் வரப் போகிறதல்லவா?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

புதுமையயான




சிறுமணி உருவிலான கிருமிநாசினி
வின்-டோல் 5ஜீ பீ.எச்.ஸி
சிறுமணி உருவிலான களைநாசினி
பீ-செப் 25ஜீ பீ. ஸீ. பீ.
ஆகிய புதுமையான பொருள்களை உபயோ கியுங்கள்.

தொல்லைதரும் தெளிகருவிகளை விட்டுத்தள்ளுங்கள். வின்டோலை வெறுமனே கையால் தூவி உங்கள் பயிர் லாபகரமாக வளருவதைக் காணுங்கள்.

உலகிலேயே அதி உச்ச நெல்விளைச்சல் பெறும் பிலிப்பைன்ஸில் வின்டோல் பரீட்சார்த்தமாக, உபயோகிக்கப்பட்டு, பரிசிலிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வின்டோல் தான் தேவை என்று கேளுங்கள். இன்று சந்தையில் கிடைக்கும் சுலபமான, பாதுகாப்பான அதிசிக்கனமான கிருமிநாசினி அதுவே.




ஏக விநியோகத்தர்கள்:
லூட்ஸ் லிமிட்டட்
மக்கலம் வீதி, கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்களில் வழிபாடு தமிழில் நடைபெற வேண்டும்!

## கோவில்களின் உரிமை மொழியாக வடமொழி இனியும் நீடிக்கக் கூடாது!

## குன்றக்குடி அடிகளார் கருத்து!

**"சைவ சமயத்தையும், தமிழ் நாகரிகத்தையும் கட்டிக் காத்துவரும் இலங்கைத் தமிழர்கள், தீண்டாமை ஒழிப்பில் தீவிர ஆர்வம் காட்ட வேண்டும். தமது சகோதர மக்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான மனித உரிமைகளை வழங்க முன்வர வேண்டும்- இதுதான் எனது இதய பூர்வமான வேண்டுகோள்."**

—இவ்வாறு இலங்கை வந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் சுதந்திரன் நிருபருக்களித்த ஓர் பேட்டியின் போது தெரிவித்தார்.

இலங்கையின் வடபகுதியில் சைவ ஆலயங்களில் இன்னும் தீண்டாமை பாராட்டப்படுவது அறிந்து தாம் மிகவும் மனம் வருந்துவதாகத் தெரிவித்த அடிகளார் மேலும் கூறியதாவது:-

"இந்து மதத்திலுள்ள தீண்டாமைப் பேயை ஒழித்துக் கட்டினால்தான் நமது சமுதாயம் முன்னேற முடியும். இந்து சமயமும் வளர்ச்சியடையும். தீண்டாமையை ஒழிப்பதற்குப் பலாத்காரமோ, மதமாற்றமோ ஒருபோதுமே பயன்படாது.

சைவ சாஸ்திரங்களில் தீண்டாமைக்குச் சாதகமான கருத்துக்களும், பாதகமான கருத்துக்களும் இருக்கின்றன. சாஸ்திரங்களை வைத்து மனித நீதிக்கு முரணுகத் தர்க்கிப்பது நேர்மையாகாது.

சைவ சமய ஞானுசிரியர்களில் ஒருவராகிய அப்பரடிகள் "சாஸ்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?" என்று ஏழாம் நூற்ருண்டிலேயே சாஸ்திரங்களைவைத்துக்கொண்டு குதர்க்கம் பேசியோரைக் கண்டித்துள்ளார். அவரது கருத்தைவிட, தமிழர்கள்—சைவ சமயிகள் பின்பற்றக் கூடிய கருத்து வேறு இருக்க முடியுமா? எனவே, இருபதாம் நூற்ருண்டுக்கு சிறிதும் பொருந்தாத — மனிதரில் ஒரு சாராரின் உரிமைகளை மறுக்கும் தீண்டாமைக் கொடுமைக்கு சாவு மணி அடிக்கும்படி, இலங்கையிலுள்ள சைவ தமிழ் அன்பர்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறிய அடிகளார் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழர்கள் அறிவாலும், அருளாலும் முதியவர்கள். அவர்களுடைய நாகரிகம் பண்பாடு யாவும் காலத்தால் முற்பட்டன. எமது வாழ்வுக்கு நெறி அமைத்திருக்கும் பன்னிருதிருமுறைகளையும் நமது இல்லங்களிலும் கோவில்களிலும் தவருது ஓதவேண்டும்.

"கடவுளின் சன்னிதானத்தில் கன்னித் தமிழில் இயற்றப்பட்ட திருமுறைகளை ஓதாமல் சமஸ்கிருதத்துக்கு இடமளித்திருப்பது மாற்றப்பட வேண்டும்.

"கோவில்களில் ஆராதனைகள் அனைத்தும் தாய்மொழியிலேயே - தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டுமென்று மிக நீண்டகாலமாகவே சொல்லி வருகிறேன். கோவில்களின் உரிமை மொழியாக இன்னும் வடமொழி நீடித்து நிலைக்குமேயானுல், சைவ சமயம் வீழ்ச்சியடைந்துவிடும். கோவில்களில் அனைத்தும் தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டும்."

## ஊர்வல மாட்சி!

கோணேசர் குடியிருக்கும் பிரெடெரிக் கோட்டையை புனித நகராக்கும்படி ஆட்சியாளரை வற்புறுத்தியும், அது சம்பந்தமாக திரு. மு. திருச்செல்வம் நியமித்த கமிட்டியை கலைத்ததற்கு கண்டனம் தெரிவித்தும் சென்ற மாத இறுதியில் குளக்கோட்டன் இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் இந்துக்கள் ஒரு மாபெரும் ஊர்வலத்தையும் கண்டனக் கூட்டத்தையும் திருமலையில் நடத்தியது தெரிந்ததே. அக்காட்சிகளைக் கீழே காணலாம்.



இடமிருந்து வலம்— (1) ஊர்வலத்தில் கொண்டு சென்ற லிங்கமும் மலையும் (2) ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட, குளக்கோட்டன் லிங்கத்தை வழிபடும் காட்சி. (3) ஊர்வலத்தில் திருவாளர்கள் டாக்டர் சிவானந்தன், மு. திருச்செல்வம், அ. அமிர்தலிங்கம் ஆகியோர் நடந்து செல்லும் காட்சி. (4) ஊர்வலத்தின் முன்னல் கொண்டு செல்லப்பட்ட கோணேசர் படமும் நிறை குடமும்.



மேலிருந்து கீழ்:— (1) ஊர்வலத்தின் முன்பகுதி. (2) ஊர்வலம் கோட்டை வாசலால் வெளியேறும் காட்சி. (3) ஊர்வலத்தின் ஒரு பகுதி. (4) பொதுக் கூட்டத்தின் ஓர் பகுதி. (5) கண்டனக் கூட்டத்திற்கு தலைமைவகித்த பண்டிதர் ஐ. சரவணமுத்து பேசுகிருர்.

### தமிழ்ப் பகுதிக்கு சிங்களப் பொலீசாரா?

## விளக்கம் கேட்டு இரத்தினம் கடிதம் சுதந்திரன் தலையங்கத்தையும் இணைத்து அனுப்பினர்!

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சனவரி முதல் தேதியிலிருந்து சிங்களப் பொலிசார் அனுப்பப்பட இருப்பது உண்மையா? இவ்வாறு ஐ.ஜி.பி. க்கு எழுதியுள்ள கடிதமொன்றில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. கேட்டுள்ளார். இக் கடிதத்துடன் தமிழ் பகுதிக்கு சிங்களப்பொலிசார் அனுப்பப்படுவதைக் கண்டித்து சுதந்திரன் தீட்டியிருந்த ஆசிரியத் தலையங்கத்தையும் திரு. இரத்தினம் இணைத்து அனுப்பியுள்ளார்.



வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கடமையாற்றும் பொலிசாரில் தமிழில் முறைப்பாடுகளை எழுதத் தெரிந்தவர்கள் எத்தனை பேர், தெரியாதவர்கள் எத்தனை பேர் என்பதை அறிவிக்கும்படி கேட்டுள்ளார்


## தீபாவளித் திருநாளன்று எல்லோரும் இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

எமது தயாரிப்புக்களான:

- மில்க் வைற் நீல சோப்
- மில்க் வைற் பார் சோப்
- மில்க் வைற் சலவைப் பவுடர்
- மில்க் வைற் மெடிக் கேட்டட் வாசனை சோப்

உள்ளூர் உற்பத்திக்குக் கிடைக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குக் கிடைக்கும் ஆதரவாகும்

மில்க்வைற் ஸ்தாபனத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமடம்

"சுமைதாங்கி"

'கூட்டறுப்போம்போரா டுவோம் காலம்மாற வழி வகுப்போம்.'

'என்னங்க, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ரொம்பச் சுமையோடு புலம்பலோடு போகிறுப் போலிருக்கு...எப்படி பிள்ளை குட்டியளெல்லாம் சுகந் தானே?'

'பிச்சை அரிசி கிடைக்கும் போது சுகத்துக்கென்ன குறைச்சல், வந்து...!'

'வந்தாவது போயாவது சும்மா சொல்லுங்க விசயம் எதுவாயினும் பிச்சுப்பிட றேன்.'

'என் மனதிலே இருக்கிற சுமையை இப்ப உங்ககிட்ட இறக்கினு, அப்புறம், இப்ப உங்கக்கிட்ட இருக்கிற சுமை யோடு இதுவும் சேர்ந்துக் கிட்டு பெரிய சுமையா கிடுமே என்றுதான் கவலை யாயிருக்கு.'

'அப்படி என்னையா என்னி டம் இல்லாத பெரிய சுமை உம்மிடம்?'

'அப்படியொன்றும்பெரிய சுமையில்லீங்க...இந்தக் கச்சை...'

'ஹ ஹ ஹா...'

'என்னங்க இது விஷயத் தை நான் கூறமுன்பே இப் படிச் சிரிக்கிறீங்க?'

'கச்சையா சுமையாக இருக்கிறது என்கிறீங்க?'

'நாசமாய்ப் போச்சுப் போங்க...கச்சதீவைப் பற்றி நான் சொல்ல வந்தா...'

'அட அந்தச் சுண்டங்காய் பிரச்சனை உங்களையும்தொற் றிக் கொண்டதா...'

'இந்தா பாருங்க இது சிறு விசயம் அல்ல, யார் ஏற்றுக் கொண்டாலென்ன ஏற்றுக் கொள்ளாவிட்டாலென்ன தமிழன் தன் மானத்திற்குச் சவால்விடும் பிரச்சினைகளில் கச்சதீவுப் பிரச்சனையும் ஒன்று என்று நான் கூற விரும்புகிறேன்.'

'எப்படியுங்க?'

'கச்சதீவு இலங்கைக்கா இந்தியாவுக்கா சொந்தம் என்பதை நிர்ணயிப்பதற்கு பாகிஸ்தானுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. கேவலம், ஒரு மந்திரி அது வும் சட்ட மந்திரி இங்கு வந்து வெளியிட்ட கருத்து இந்தியாவின்மேல் பாகிஸ் தானுக்கு இருக்கிற துவேச மனப்பான்மையாகவே வைத்துக் கொண்டாலும் ஒரு மந்திரியின் தராதரமே இப்படியிருந்தால் ஒரு சாதா ரணப் பிரஜையின் அறிவு எப்படியிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாமே!'

'ரொம்பச்சரியுங்க, அவ ரைத்தீர்ப்புக்கூறுமாறு யாரும் நியமித்ததாகவோ அழைத்ததாகவோ தெரிய வில்லை. அப்படியிருக்க இரு நேச நாடுகளின் பிரச்சினை யில் அனுவசியமாகக் தலை யிட்டுத் தன்மதிப்பையும் அதன்பயனுகப் தன் நாட் டின் மதிப்பையும் சற்றுக் குறைத்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது'

'தமிழன் தன்னைத்தானே ஆண்டுகொண்டு உள்நாட்டு வெளிநாட்டுப்பிரச்சினைக ளில் தன் விருப்பம்போல் நடந்து கொள்ளும் நாள் வரும் வரை அவன் விஷயத் தில் பிறர் தலையீடுகள் இருந்து கொண்டுதானிருக் கும்''

'புரியவில்லையே!''

''ஓய் கச்சதீவின் சொந் தக்காரர் தமிழர்கள். அது இந்தியருக்கா இலங்கை யருக்கா என்பதைத் தீர் மானிக்க வேண்டியவர்கள் அவர்கள் தான். பாகிஸ்தா னியர் மாத்திரமல்லாது தென்னிலங்கையரும் வட இந்தியரும் ஏன் தங்கள் மண்டையைப்போட்டு உடைத்துக் கொள்கிறுர் கள் என்பதுதான் தெரிய வில்லை. தமிழர் மீது குதிரை விடும் உரிமை தங்களிடந் தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என் பதை உலகுக்குக் காட்டு வதற்காக தாங்களாகவே இப்படி ஒரு பிரச்சனை...''

''ஐயோ! ஐயோ! அந்த வெட்கக்கேட்டைப் பேசா தீங்க, நம்ம ஊரிலே இருக் கிற கோணேஸ்வரத்தைக் கூட புனிதநகராக்கும் அதி காரம் நமகில்லையே!!

''தமிழரிடையேயிருக்கும் எட்டப்பரை ஒழிக்கும் வரை இந்நிலை நீடிக்கும்''

'அது சொன்னியளே சரி வயிற்றுப்பிழைப் பிற்காக மாத்திரமல்லாது இனத் தைக் காட்டிக்கொடுத்தே னும் தாம் சொகுசாக வாழ்ந்தால் போதும் வருங் காலம் எப்படிப் போனு லென்ன என்ற சுய நலம் நம்மவரிடையே நீடிக்கும் வரை...''

'தமிழன் தலை நிமிர முடி யாது''

''ஏன் இப்படி அழுகி றீங்க போயிட்டு வாங்க. நம்மிடையேயும் இவற்றை யெல்லாம் உணர்ந்த அரும் பெருந் தலைவர்கள் இருக்கி றுர்கள் பயப்படாதீர்கள்''

''கட்டறுப்போம் போரா டுவோம்-காலம் மாற வழி வகுப்போம்''

நவம்பர் 5— அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# கருத்துக் கணிப்பில் நிக்சன் வெற்றி!

நவம்பர் 5-ம் தேதி அமெரிக்க அதிபர் தேர்தல் நாள் —இன்னும் இரு வாரங்கள் தாம் உள்ளன. ஜனதிபதி பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர் களின் தேர்தல் இயக்கமும் இவ்வாரம் சூடு பிடிக் கக் தொடங்கிவிட்டது. குடியரசு, ஜனநாயகக் கட்சி களின் வேட்பாளர்கள் நாடு நெடுகிலும் தம் தேர் தல் பிரச்னைகளை வைத்து பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

இத்தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக றிச்சார்ட் எம். நிக்சனும், ஜனநாயகக் கட்சி சார்பில் ஹியூபேர்ட் ஹம்பிரியும், போட்டியிடுகின்றனர் என் பது தெரிந்ததே.

இவர்களைவிட, ஜனதிபதி பதவிக்கு போட்டியிடும் மற் ெருருவர் ஜோர்ஜ். சி. வாலஸ். இவர் ஒரு ''கன்சர் வெடிவ்'' கறுப்பர்களுக்கு வேள்ளையர்களுடன் சம உரிமை வழங்குவதை தீவிர மாக எதிர்ப்பவர்.

இம் மூவரும் தேர்தல் பிர சாரத்தில் மும்முரமாக இறங்கியுள்ளனர்.

தேர்தலின் இறுதி முடிவு கோடிக்கணக்கான வாக்கா ளர்கள் கையில் தான் இருக்கிறது என்றுலும். அண்மையில் நடத்தப் பெற்ற மக்கள் கருத்துக் கணிப்புகள் பல, இந்தத் தருணத்தில் தேர்தல்கள் நடத்தப்பெறுமானல் நிக் ஸன் பெருவாரியான வோட்டு வித்தியாசத்தின் பேரில் வெற்றி பெறுவர் என்று குறிப்பிடுகின்றன.

## நிக்சனுக்கு ஆதரவு

சென்ற வாரம் நாடு முழு வதிலும் நடத்தப் பெற்ற 'காலப்போல்' கணிப்பின் படி 43சத வீதம் வாக்கா ளர்கள் நிக்ஸனை ஆதரிக் கின்றனர்; ஹம்ப்ரிக்கு 31 சதவீதம்பேர், வால ஸுக்கு 19சத வீதம் பேர்; ஏழு சத வீதம் பேர் யாரை ஆதரிப்பது என்று இன்னும் முடிவு செய்ய வில்லை.

சென்ற ஆகஸ்ட் மாதக் கடைசியில் நடைபெற்ற இதே 'காலப் போல்' கணிப்பின் போது நிக்ஸ னுக்கு 45 சத வீதமும் ஹம்ப்ரிக்கு 29ம், வால சுக்கு 18ம் கிடைத்தன. இப்பொழுது ஜனநாயகக் கட்சிக்குச் சற்று அதிகம் கிடைத்திருக்கிறது.

பிற கருத்துக் கணிப்பு களிலும் கூடக் குடியரசுக் கட்சியின் வேட்பாளருக்கே பலத்த ஆதரவு இருப்ப தாகத் தரிகிறது. ஜனதி பதி பதவியைக் கைப்பற்றத் தேவையான தேர்தல்குழு வாக்குகள் 270.

## நியூஸ் வீக் கணிப்பு

அண்மையில் நியூஸ்வீக் பத்திரிகை நடத்திய கருத் துக்கணிப்பு நிக்ஸனுக்கு 31 மாநிலங்களின் 329தேர் தல்குழு வாக்குகளைக் கொடுத்தது. வாலசுக்கு 9 மாநிலங்களின் 89 வாக்கு கள் தரப்பட்டன. ஹம்ப் ரியின் இடம் மூன்ருவது; ஏழு மாநிலங்களின் 54தேர் தல்குழு வாக்குகள் அவருக் குக்குத் தரப்பட்டன.

## டைம் கணிப்பு

'டைம்' பத்திரிகை நடத் திய கருத்துக் கணிப்பு. 34 மாநிலங்களின் 328தேர் தல் குழு வாக்குகளை நிக்ஸ னுக்கும் 10 மாநிலங்களின் 121 வாக்குகளை ஹம்ஃப் ரிக்கும், நான்கு மாநிலங் களின் 39 வாக்குகளை வால சுக்கும் அளித்தது.

'நியூயார்க் டைம்ஸ்' நிக் ஸனுக்கு மிக அதிகபட்ச வாக்குகள் கொடுத்தது. 30 மாநிலங்களின் 346தேர் தல் குழு வாக்குகள் அவ ருக்கு வழங்கியது. இரண் டாவது இடம் வாலஸுக்கு: எட்டு மாநிலங்களின் 77 வாக்குகள் அவருக்குக் கொடுத்தது: மூன்ருவது ஹம்ப்ரி; ஆறு மாநிலங்க ளின் 42 தேர்தல் குழு வோட்டுகளும் கொலம் பியா மாவட்டத்தின் தேர் தல் குழு வாக்குகளும் அவருக்கு அளித்தது.

இந்நிலைமைகளைக் கொ ண்டு பார்க்கும்போது அமெ ரிக்காவின் புதிய ஜனதிபதி யாக நிக்சனே தேர்ந்தெடுக் கப்படுவார் என்ற கருத்து ஊர்ஜிதமாகிறது.

# பிரஜாவுரிமை மனுக்களுக்கு

## கையெழுத்திட தமிழரசு எம். பீகள்

# வாராவாரம் மலையகம் செல்வர்!

இ. தொ. கழகமும், தமிழ ரசுக் கட்சியும் மலையகத்தில் தொழிற் சங்க முக்கியஸ்தர் களை சமாதான நீதவானுக நியமிக்கும்படியும், அப்படி நியமிப்பதன் மூலம் இலங்கை, இந் திய பிரஜா உரிமை விடயத் தில் தொழிலாளர்களுக்கு பேருதவியாக இருக்கும் என் றும் அரசாங்கத்துக்கு எடுத் துக் கூறி வருகிறது.

தொழிலாளர்கள் பிரஜா உரிமை மனுவுக்கு சமா தான நீதவானிடமிருந்து கைச் சாத்து பெறும்விடயத் தில் தற்சமயம் இருந்து வரும் கஷ்டத்தைப் போக்கு முகமாக தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கள் வாராவாரம் தோட் டப் பகுதிகளுக்கு வருகை தந்து மனுப்பத்திரங்களுக்கு கைச்சாத்திட முடிவு செய் துள்ளதாக கழகத்தின் துணைச் செயலாளர் திரு.




கோ. இ. து. கோவிந்தரா ஜன் அறிவித்தார்.

இவ்வேற்பாட்டின்படி சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத்தின் துணைத்தலைவருமான திரு. வி. என், நவரத்தினம் அவர்கள் கடந்த 9-10-68ல் கொட்டகலை மம்பட்டித் தோட்டத்திற்கு விஜயம் செய்து தொழிலாளர்கள் நிரப்பியிருந்த இலங்கை மனுப்பத்திரத்திற்கு கைச் சாத்திட்டார்.

சங்க பாகுபாடின்றி சகல தொழிலாளர்களுக்கும் பிரஜா உரிமை விடயத்தில் உதவி செய்ய இ. தொ. கழ கமும், இ. த. அ. கட்சியும் சகல ஏற்பாடுகளையும் மேற் கொண்டுள்ளதாக திரு. கோவிந்தராஜன் தெரிவித் தார்.

# "இ. தொ. க. கலைக்கப்படு மென்பது 'தினபதியின் கட்டுக்கதை!"

## சா. ஜே. வே. அறிவிப்பு!

"இலங்கைத் தொழிலாளர் கழகத்தை கலைத்து விடும் எண்ணம் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டதும் இல்லை ;ஏற்படப் போவதுமில்லை. இ. தொ. கழகத் தை தமிழரசுக் கட்சி கலைக்க யோசிப்பதாக வந்த செய்தி, 'தினபதி' பத்திரிகையால் வேண்டும் என்று திரித்து உருவாக்கப்பட்ட ஓர் பொய்யான செய்தியாகும்.

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், இ. தொ. க. துணைச்செயலாளருக்கு எழுதியுள்ள கடிதமொன் றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

கழகத்தை கலைக்கும் எண் ணம்எங்கள் கட்சிக்கு ஏற்பட் டதும்இல்லை ஏற்படப்போவ துமில்லை. இச்செய்தி ''தின பதி'' பத்திரிகையால் வேண்டும் என திரிக்கப் பட்ட ஓர் பொய்யான செய் தியாகும்.

தினபதி இதுவரை காலமு மாக எமது கட்சிக்கு எதி ராக வடகிழக்கு மாகாணங் களில் பிரசாரம் செய்து அதில் ஏதும் வெற்றிகிட் டாது போகவே இப்போ தனது திசையை மலைநாட் டுப் பக்கம் திருப்பியுள்ளது.

நான் இது விடயமாக திரு. தர்மலிங்கம் அவர்க ளோடு பேசியுள்ளேன். இவ் வாரக் கடைசியில் திரு. நவ ரத்தினம், திரு. தர்மலிங் கம் ஆகிய இருவரும் பன் வீலக்குவருகிறுர்கள். அவர் கள் உங்கள் சந்தேகங்களைக் போக்குவார்கள். அத்தோடு தினபதியில்வந்த செய்தியில் எவ்வித உண்மையுமில்லை யென்பதை எமது கழக உறுப்பினர்களுக்கும் எமது ஆதரவாளர்களுக்கும்சொல் லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கல்வி அமைச்சும் தமிழரசார் பொறுப்பும்

கல்வியமைச்சர் மீது பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததன் மூலம் கல்வியமைச்சரையும், அரசாங்கத்தையும் தமிழரசுக்கட்சி காப்பாற்றியது சரியான செயலா என்று ஒரு சர்ச்சை கிளம்பி இருக்கிறது.

கல்வி அமைச்சர் எடுத்த பல நடவடிக்கைகள் தமிழ் பேசும் மாணவர்களின் முன்னேற்றத்துக்கு ஆழக்குழி வெட்டுவதாயமைந்திருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழ் மாணவர்கள் தங்கள் முயற்சியினல் படித்து முன்னேறி வருவதைக் கண்டு பொறுமை பிடித்து, கல்வித் துறையில் அவர்கள் வளர்ச்சி அடையாமல் தடுத்து நிறுத்தி விடுவதற்குப் பாரபட்சமான பல சூழ்ச்சிகளைக் கையாண்டு வந்துள்ளது கல்வியமைச்சு.

ஸ்கொலஷிப்புகள் பல தமிழருக்கு மறுக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விஞ்ஞானகூட வசதிகள் உபகரணங்கள் வழங்குவது வேண்டுமென்றே தடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு பாடசாலைகளிலேயுள்ள அதே வசதிகள் சிங்களப் பாடசாலைகள் அனைத்துக்கும் கிடைக்குமட்டும், வடக்கு கிழக்கு பாடசாலைகளுக்கு விஞ்ஞான கூடங்கள் அமைத்துத்தரமாட்டேன் என்று வகுப்புவெறி கொண்டு ஒரு காலகத்தில் திரு. இரிய கொல்லை அலறியதும் உண்மை தான்!

இப்படிக் கல்வியமைச்சு தமிழ் மக்களுக்குத் திட்டமிட்டுச் செய்த துரோகங்கள்—பாரபட்சங்கள் ஏராளம் ஏராளம்!

ஆனல், கல்வியமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில்—தமிழ் பேசும் மக்களுக்குப் பாரபட்சமாகக் கல்வியமைச்சர் நடந்து கொண்டதாக அவரைக் கண்டித்து ஒரு வார்த்தை கூடக் கிடையாது.

கல்வி அமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த எதிர்க்கட்சியினர் மட்டும் என்ன யோக்கியர்களா? அவர்களும் தமது ஆட்சி நடந்தபோது இப்போதைய கல்வி அமைச்சரைவிட மிகவும் மோசமாகத் தமிழினத்தின் கல்வித் தேவைகளைச் சூறையாடியவர்களே. இன்னும் சொல்லப் போனல், தமிழினத்தின் கல்வி முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கால்கோள் விழா நடத்தியவர்களே எதிர்க்கட்சியினர் தான்!

அப்படிப்பட்ட எதிர்க்கட்சியினர்—தமிழ்மக்களின் நலனை எள்ளளவுமே கருதாது—தங்கள் சுயநல நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மட்டுமே கல்வியமைச்சர் மீது கொண்டுவந்த ஒரு அவநம்பிக்கைத் தீர்மானத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்க மறுத்ததில் அதிக தவறு காண முடியாது.

அதுமட்டுமல்ல—ஒருமுறை காந்தியடிகள் கூறினர்—''எதிரியின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவன் மீது போர் தொடுப்பவன் உண்மை வீரனாக முடியாது'' என்று.

காந்தியடிகளின் அறவுரைகளைப் பின்பற்றி—காந்திய நெறியில் இந்நாட்டுத் தமிழ் மக்களை வழி நடத்திச் செல்லும் தமிழரசுக் கட்சி, கல்வியமைச்சின் பலவீனத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அவரை வீழ்த்திவிட மறுத்துவிட்டது முற்றிலும் நியாயமானதே!

ஆனல்தமிழரசுக்கட்சியினருக்கு ஒன்றுகூற விரும்புகிறோம். கல்வியமைச்சில் தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக அநீதிகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடியாக திட்டவட்டமான நடவடிக்கைகளை தமிழரசார் எடுக்கவேண்டியது அவசரமும் அவசியமுமானது.

தமிழ்பேசும் மக்களின் பிரதேசத்தில் தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட ஓர் பல்கலைக் கழகம் நிறுவவேண்டுமென்று நீண்ட காலமாக தமிழ் பேசும் மக்கள் கோரி வருகிறார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கையெழுத்திட்டு இதுபற்றி அரசாங்கத்திடம் சில ஆண்டுகளுக்கு முன் மகஜர் சமர்ப்பித்திருந்தும் தமிழ் பேசும் மக்களின் இக்கல்வித் தேவையை நிறைவேற்றி வைப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதே வேளையில், வித்யாலங்கார பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் சிங்களம் மூலம் தாவரவியல், மிருக வியல்போன்ற பாடங்களை கற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக இரண்டாம் வருட கலைத்துறை மாணவர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகம் கதவைச் சாத்திவிட முடிவுசெய்துவிட்டது. இதே முடிவுக்கு நாளை கொழும்புப் பல்கலைக்கழகமும் வரலாம்.

இந்த நிலையில் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி பெற தமிழ்ப் பிரதேசத்தில் பூரண வசதிகள் அடங்கிய பல்கலைக்கழகமொன்று உடனடியாக நிறுவப்பட வேண்டியது இன்றியமையாதது. எனவே இப் பிரச்சினையில் அரசாங்கத்தை திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரும்படி செய்து தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகத்தை பெற்றுக் கொடுக்க தமிழரசுக்கட்சி வேகமாக செயல்படவேண்டிய நேரம் வந்துவிட்டது.

# புனித நகர் பிரச்சினையில் பிரதமர் நடவடிக்கை!

## தமிழ்மக்களின் எதிர்ப்புக்கு கிடைத்த முதல் வெற்றி!!

திருமலையின் அபிவிருத்தி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆறு அரசாங்க அதிகாரிகளான நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட ஒரு குழுவை அண்மையில் பிரதமர் நியமித்துள்ளார். திருமலை பிரெடெரிக் கோட்டை முழுவதையும், அல்லது அதன் ஒரு பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டுமா என்பதையும் ஆராய்ந்து தெரிவிக்கும்படி இக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இக்குழுவில் ஒரேயொரு தமிழரே இடம் பெற்றுள்ளார்.

கோணேஸ்வர ஆலயப்பகுதியையும் பிரெடெரிக் கோட்டையையும் இந்துக்களின் புனித நகராகப் பிரகடனப் படுத்தவேண்டுமென்றும் அதற்கென ஆராய்வதற்கு முன்னுள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் நியமித்திருந்த குழுவின் நடவடிக்கைகளை பிரதமர் தான்தோன்றித்தனமாக நிறுத்திவைத்தது மிகப்பெரிய தவறென்றும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் குறிப்பாக இந்துக்கள் ஒரு சேர எழுப்பிய குரல் பிரதமரது இதயத்தை ஓரளவு தைத்துள்ளது என்பதையே அவரது இந்த நடவடிக்கை சுட்டிக் காட்டுகிறது.

### 'திரு' எச்சரிக்கை

கோணசர் புனித நகர்ப் பிரச்சினை சம்பந்தமாக சமீபத்தில் திருமலையில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் பேசிய திரு. மு. திருச்செல்வம்— ''20 இலட்சம் இந்துக்களைப் புறக்கணித்துவிட்டு—அவர்களின் ஏகோபித்த கோரிக்கையை அலட்சியப்படுத்திவிட்டு — எந்த ஆட்சியும் இந்நாட்டில் நீடிக்க முடியாது'' என்று ஆக்ரோஷமாக தெரிவித்திருந்தார்.

தமிழரசுக் கட்சியின் வலிவான எதிர்ப்பும், இந்துக்களின் ஏகோபித்த குரலும பிரதமரது உள்ளத்தில் ஊடுருவித் தைத்துள்ளதால் தான், திருமலை அபிவிருத்தி குறித்து ஆராய்வதற்கென தாம் நியமித்துள்ள புதிய குழுவிடம்புனிதநகர்ப் பிரச்சினையையும் ஆராயும்படி பிரதமர் கேட்டுள்ளார். பிரதமரது இந்த நடவடிக்கை இந்துக்களை ஏமாற்றும் வெறும் கண்துடைப்பு என்று சிலர் வாதிடலாம்: அந்த வாதத்தை தவறானது என்று நாம் அப்படியே தள்ளிவிடவில்லை.

### எதிர்ப்பின் சக்தி

ஆனல் இந்துக்கள் காட்டிய எதிர்ப்பின் வலிவுதான்—தமிழரசுக் கட்சியின் சக்திதான் புனிதநகர்க் கோரிக்கையை குப்பைத் தொட்டிக்குள் போட முனைந்த பிரதமரை, மீண்டும் அது பற்றி ஆராயும்படி உத்தரவிடுவதற்கு வைத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆனல் பிரதமரை நாம் ஒன்று கேட்க விரும்புகிறோம்—திருமலை கோணேசர் ஆலயமும், பிரெடெரிக் கோட்டையும் புனிதநகராக்கப்படவேண்டுமென்பது இந்துக்களின் ஏகோபித்த நீண்டகாலக் கோரிக்கை. கட்சி வேறுபாடற்ற கோரிக்கை. இக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டியதுதான் ஓர் சனநாயகப் பிரதமரின் கடமை. இந்த நிலையில் பிரெடெரிக் கோட்டை புனித நகராக்கப்பட வேண்டுமா என்று ஆராய்வதற்கு இன்னும் என்ன இருக்கிறது?

### இந்துக்கள் ஆசை

பிரெடெரிக் கோட்டை முழுவதும் இந்துக்களின் புனிதநகராக்கப்படவேண்டும். இதுவே இந்து மக்களின் கோரிக்கை.

சாட்டுக்காக—கண்துடைப்புக்காக கோவில் பகுதியை மாத்திரம்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் கல்வியமைச்சரின் "நல்ல பிள்ளைகளா"?

பாராளுமன்றத்தில், எதிாக் கட்சியினரால் கல்வியமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இம்மாதம் 10 ந் திகதி விவாதம் நடைபெற்றது யாவருமறிந்ததே. இத்தீர்மானத்தை எதிர்த்தும்—அரசாங்கத்தை ஆதரித்தும், தமிழரசு தமிழ் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிப் பிரதிநிதிகளும் வாக்களித்தனர்.

ஆனல் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதற்கு முன்னர், கல்வியமைச்சு தமிழ் மக்களுக்கு எதிராக செய்துவந்த சதிச் செயல்களையும் பாரபட்ச நடவடிக்கைகளையும், எடுத்துக் கூறி, அவற்றை அக்கு வேறு ஆணி வேருக்கி, கல்வியமைச்சருக்கு சரியான சவுக்கடி கொடுக்கத் தமிழரசார் சிறிதும் தயங்கவில்லை,

தமிழரசு பிரதிநிதிகளான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கமும், வி. என். நவரத்தினமும், கல்வியமைச்சின் பாரபட்ச நடவடிக்கையால் தமிழ் மக்கள் படும் அல்லல்கள் குறித்தும், தமிழ் மக்களுக் கென ஒரு பல்கலைக்கழகமின்மையால் உயர் கலவி பெற அவர்கள் படும் கஷ்டங்கள் குறித்தும் தமிழ்ப் பட்டதாரிகள் வேலையின்றிப்படும் தொல்லைகள் குறித்தும் திட்டவட்டமாக எடுத்துக் காட்டி கல்வி அமைச்சருக்கு இடித்துக் கூறியிருக்கிறனர்.

### காங்கிரஸ் மௌனம்

கல்வியமைச்சர் மீது பாராளுமன்றத்துக்கு வெளியே ஆவேசக்கனல் பறக்க மூச்சைப் பிடித்துக் கொண்டு தாக்குதல் நடத்தி வரும் திருவாளர்கள் பொன்னம்பலமும், அவரது இரு சிவசிதம்பரங்களும் பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தை கூட கல்வியமைச்சரைக் கண்டிக்காது வாய் பொத்தி 'நல்ல பிள்ளைகளாக' நடந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவராவது சுண்டு விரலெழுப்பி கல்வியமைச்சரைக் கண்டிப்பதற்கு பாராளுமன்றத்துள் துணியவில்லை. வெளியே தமிழ் மக்களுக்காக—அவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக தமிழ் காங்கிரஸ்காரர்கள் வடிக்கும் முதலைக் கண்ணீருக்கோ சிறிதும் பஞ்சமில்லை.

தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் போடும் இந்த இரட்டை வேடத்தை—துரோக நாடகத்தை தமிழ் மக்கள் நன்கு இனம் கண்டு கொள்வார்களாக!

தமிழ்த் தலைமையாசிரியர்கள் 55வயதுக்கு மேல் பதவியில் நீடிப்பதற்கு சிங்களத் தகுதி கோரப்படுகின்றது. கல்வியமைச்சிலிருந்து தமிழாசிரியர்களுக்கு தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகள் இன்னும் கூட அனுப்பப்பட்டுவருகின்றன.

தமிழ்ப் பட்டதாரி மாணவர்கள் சிங்களம் படித்தும் அவர்களுக்கு ஆசிரிய வேலை வழங்குவதில் கல்வியமைச்சு அக்கறை காட்டவே மறுக்கிறது.

சிங்களம் தெரியாத ஒருவர், கல்வியமைச்சுக்குள் நுழைந்து ஒரு அலுவல் கூட செய்ய முடியாதபடி சர்வ சிங்கள கூடாரமாக கல்வியமைச்சு காட்சி தருகிறது.

தோட்டப்பகுதி தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவற்றை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்ற கோரிக்கையும் நீண்ட நாட்களாக தட்டிக்கழிக்கப்பட்டு வருகிறது.

இவை போன்ற தமிழ் மக்களுக்கு பாதகமான இன்னும் பல செயல்கள் தொடர்ந்தும் கல்வியமைச்சில் நடைபெற்று வருகின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த முன்னையைவிட இன்னும் வலிவோடும் வேகத்தோடும் செயல்பட வேண்டியது தமிழரசுக் கட்சியின் நீங்காக் கடமையென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணு பிறந்த நாள் விழாவில் செல்வா மீது வசைமாரி!

## கொதிப் படைந்த பொது மக்கள் கூட்டத் தலைவரின் நாவை அடக்கினர்!

தமிழரசுத்தந்தையை 'கிழட்டுசெல்வநாயகம்' என்று இழிமொழிகளால் வைதார் கூட்டத்தலைவர். இதைக் கேட்டதும் கூட்டத்தில் திரண்டிருந்த தமிழ் மக்கள் கொதிப்படைந்து "தமிழரசுத் தந்தையை திட்டாதே! அண்ணு விழாவில் அண்ணு மதிக்கும் ஈழத்துக் காந்தியை இழி மொழிகளால் வையாதே!" என்று கூக்குரலிட்டனர்.

இதைத் தொடர்ந்து சுமார் 10 நிமிடங்களுக்கு கொந்தளிப்பான நிலை நீடித்தது. கூட்டத் தலைவரை மேடையைவிட்டு வெளியேறும்படி பொது மக்கள் சத்தமிட்டனர். இந்த நிலையில் தமிழ்நாடு அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றத்தலைவர் திரு. இரா. ஜனார்த்தனமும் ஜனுப் மசூர்மவ்லானுவுமே தலையிட்டு மிகுந்த சிரமத்துடன் குமுறி நின்ற மக்களைக் கட்டுப்படுத்திஞர்கள். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில நடைபெறறது.

கொழும்பு எம். ஜி ஆர். மன்றத்தினல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அண்ணுவிழா 12-10-68 மாலை கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. ஆ. நடராசா என்பவர் தலைமை வகித்தார்.

கூட்டம் கூட்டப்பட்டது அண்ணுவின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்துக்காக. ஆனல் தலைமை வகித்த திரு. நடராசாவோ அதையெல்லாம் மறந்து தமிழரசுத தலைவர் திரு. செல்வநாயகத்தையும் தமிழரசுக் கட்சியையும் திட்டத் தொடங்கினர். "கிழட்டுச் செல்வநாயகம் தமிழர்களுக்கு இனியும் தலைமை தாங்க வேண்டாம். இளைஞர்களே தமிழினத்தைத் தலைமை தாங்கி வழி நடத்தட்டும்" என்றும் வேறு பல வார்த்தைகளாலும், தமிழரசுத் தந்தையைத் திட்டத்தொடங்கினர்.

கூட்டத் தலைவரின் இந்த தேவையற்ற பேச்சுக் கூடியிருந்த தமிழ்ப் பொதுமக்களைக் கொதிப்படைய வைத்தது. மக்கள் தங்களுக்குள் முணு முணுக்கத் தொடங்கினர். கூட்டத்தினரிடையே ஆங்காங்கு சலசலப்புக் காணப்பட்டது.

தலைவரின் பேச்சைத் தொடர்ந்து திரு. எச்.பத்மநாதன் பேசினர். அதன் பின் ஜனுப் மசூர்மௌலானு மேடையில் தோன்றினர். மசூர் மௌலானுவைக் கண்ட பொது மக்கள் களிப்புடன் பலத்த கையொலியெழுப்பி வரவேற்றனர். மசூர்மௌலானு தமது பேச்சில் கூட்டத்தலைவர் தேவையற்ற கருத்துக்களை பொருத்தமற்ற இடத்தில் கூறியதற்கு மறைமுகமாக கண்டனம் தெரிவித்தார்.

"அண்ணு விழாவில் அண்ணுவின் புகழைப்பாடவேண்டுமே தவிர வேறு பேச்சு எதற்காக? பார்க்கப் போனுல் அண்ணுவும் 60 வயது சென்ற 'கிழட்டுத்' தலைவர்தான்! அண்ணு மதிப்பு வைத்திருக்கும் பெரியாரும் ராஜாஜியும் கூட முதுபெரும் தலைவர்கள் தான்! அன்பும் பண்பும் அடக்கமும் வாய்ந்தஅண்ணு விழாவில் அண்ணுவைப் பற்றியே சிந்திப்போம்" என்றும் சுடச்சுட கொடுத்தார் மௌலானு.

மசூர் பேச்சைத் தொடர்ந்து குறிப்புரை கூறத்தொடங்கிய தலைவர் மீண்டும் தமிழரசுத் தந்தையைத்தாக்கத் தொடங்கவே அடக்க முடியாத அளவுக்கு உணர்ச்சி கொப்பளிக்க கூடியிருந்த மிழர் கூட்டம் பொறுமை இழந்து ஒரு சேர எழுந்து பலத்த கூச்சல் போட்டு தலைவரின் வாயை அடக்கியது. இதனுல், சுமார் 10 நிமிடநேரம் கூட்டத்தில் பெருத்த கொந்தளிப்பு நிலவியது. தலைவர் முகம் பேயறைந்ததுபோற் காணப்பட்டது.

இதன்பின்னர், திரு. இரா. ஜனார்த்தனம் பேசத் தொடங்கியதும் கூட்டத்தில் மீண்டும் மெல்லமெல்ல அமைதி ஏற்பட்டது. திரு. ஜனார்த்தனம் கூடியிருந்த பொதுமக்களின் உணர்ச்சியைப் புரிந்துகொண்டு மீண்டும் கூட்டத் தலைவருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காது தமது பேச்சு முடிவடைந்ததும், அத்துடன் கூட்டம் முடிவடைந்து விட்டதாக அறிவித்தார்.

அதன் பின்னும் ஆத்திரத்துடன் கூட்டத் தலைவரின் வரவை எதிர்பார்த்துகாத்து நின்ற இளைஞர் கூட்டத்தை ஜனுப் மௌலானுவே சமாதானம் செய்து அங்கிருந்து வெளியேற்றியது குறிப்பிடத்தக்கது.

---

## சமஷ்டிக்கட்சி விருப்பப்படி நிலம் வழங்கப்படுகிறதாம்

சமஷ்டிக் கட்சிக்கு கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக வடக்கு கிழங்கு மாகாணங்களில் இளைஞர் ஸ்தாபனங்களுக்கு காணி வழங்கும் திட்டம் அமுலாக்கப் படுகிறது. இந்த ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் 25 ஏக்கர் நிலம் கொடுக்கப்படுகிறது. இவற்றில் சில ஸ்தாபனங்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மிகச் சிலரைக் கொண்டவை. நிலம் கிடைக்கும் என்பதை அறிந்தே சிலர் இந்த ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த ஸ்தாபனங்கள் யாவற்றிலும் சமஷ்டித்தலைவர்கள் இருக்கிருர்கள்' — இவ்வாறு 'எத்த' (5. 10. 68) செய்தியொன்று கூறுகிறது.

## முடிவு மாறி விட்டதாம்!

'டட்லி சமஷ்டியினரிடம் மீண்டும் மண்டியிடுகிருர்' என்ற தலைப்பின் கீழ் 'எத்த' (5. 10. 68) வெளியிட்டுள்ள செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'சமஷ்டிக்கட்சியினரின் வேண்டுகோளின் பேரில் உத்தியோக மொழியில் தேர்ச்சி பெருத அரசாங்க ஊழியரை வேலை நீக்க செய்வதென்ற முடிவை அரசாங்கம் மாற்றிக் கொண்டுள்ளது''

---

## டட்லி ஆட்சியில் சமஷ்டி வாதிகளுக்கு இன்னும் அதிகாரம் இருக்கிறதாம்!

'டட்லி அரசாங்கத்தில் சமஷ்டிக்கட்சி இன்னமும் ஓர் அதிகாரப் பிரிவாக இருக்கிறதென்பதற்கு சாட்சியமிருப்பதாக 'எத்த' (5. 10. 68) ஆசிரியத்தலையங்கம் கூறுகிறது.

அத்தலையங்கம் கூறுவதாவது:—

டட்லி செல்வா தம்பதிகள் பிரிந்து கொண்டது பொது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையென்பது இரகசியமல்ல. முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறைக்க எவ்வளவோ முயற்சிசெய்தார்கள். ஆனுல் குட்டு வெளிப்பட்டு விட்டது.

பொதுத் தேர்தலையொட்டி அவர்கள் செய்து கொண்ட இன்னெரு ஒப்பந்தத்தின் கீழ் அவர்கள் பிரிந்தார்கள். இரண்டாவது திட்டத்தையும் மூடிமறைக்கமுயன்றனர். டட்லி ஆட்சியில் சமஷ்டிக்கட்சிக்கு இன்னும் பிடி இருக்கிறது. இதற்கு போதிய சாட்சியமிருக்கிறது.

எமது தலைப்புச் செய்தி இதற்கு சான்று. வடக்கு கிழக்கிலுள்ள நிலங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பது அவர்களின் கொள்கை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை பிரதமர் சமஷ்டி வாதிகளுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டார். உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் நிறை வேறுகிறது. இந்த நிலங்கள் காலப் போக்கில் சிறு சிறு நிலங்களாக அமையும். இவை ஒன்ருக இணையும் போது அவர்களின் எதிர்ப்பை சமாளிப்பது கடுமையாக இருக்கும்

'இந்த நிலங்களிலிருந்து தேவைப்படும் நேரத்தில் அவர்களை அரசாங்கத்தால் வெளியேற்ற முடியாது. அப்போது சமஷ்டியினரின் சக்தி வாய்ந்த ஸ்தாபனங்களோடு அரசாங்கம் போராட வேண்டியிருக்கும் நாட்டைப் பிரிப்பதற்கு சமஷ்டி வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதியின் மீது இத் துரோகம் மக்களின் முதுகுக்குப்பின் ஞல் நடைபெறுகிறது."

### சிங்கள இதழ்களில் . . .

#### சம அந்தஸ்து வழங்க ஏற்பாடு

'அரசாங்கம்மிகவிரைவில் சிங்களத்தைபோல அரசாங்க கருமங்களில் தமிழுக்கும் சம அந்தஸ்துகொடுக்கப்போகிறது. தமிழ் மொழி அமுல் சட்டத்தின் மூலம் இது நிறைவேற்றப்படும். திரு. என். சிவராஜ் என்பவர் அரச கருமமொழி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தச் சட்டம் அமுலாக்கப்படுவதைகவனிப்பது தான் இவரதுவேலை'

—சிறீலக்க 5. 10. 68

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி; கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணா என்னுமோர் மந்திரச்சொல்!

ஏப்ரல் 19 1968, அது வெள்ளிக்கிழமைஇரவு மணி 7-30 இடம்: நியூயார்க் நகரின் 64-ம் தெருவில் உள்ள இந்தியா மாளிகை,

அழகிய அலங்கார விளக்குகள் ஒளி உமிழும் உயர்ந்த சுவர்களையுடைய வரவேற்பு மண்டபம்.

பல்வேறு நாட்டுத் தூதர்கள்நின்றுகொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் ஐ நா, அதிகாரிகள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்அழகுமிழும் வண்ணப் புடவைகளை உடுத்திய அமெரிக்க இந்திய மகளிர்.

இதுகாறும் இத்தனை கூட்டத்தினை இந்திய மாளிகை கண்டதில்லை என்கிறார் தூதரக அதிகாரிஒருவர். திருமதி இந்திராகாந்தி வருகைதந்த ஒரு நேரம் தவிர என்றும் அவர் சொல்கிறார்,

இதற்குக் காரணமாயிருக்கும் அந்தச் சிறப்பு நிகழ்ச்சியாதென்றறிய நாம் துடிக்கிறோம். இவ்வாறு கௌரவிக்கப்படும் அப்பெரும் தலைவர் எவரென்றறிய நாம் அவாவுகிறோம்.

அங்கே குட்டை உருவில் ஒரு மனிதர் மலர்ந்த முகத்தோடு நிற்கிறார், அவர் புன்முறுவலிக்கும் ஒவ்வொரு நேரமும் விரிகின்றது அவரது வெண் மீசை. தமது விரலை அசைத்தவாறுஇலங்கையின் தூதர் அமரசிங்கேயுடன் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்-வந்து குவிந்த வண்ணமிருக்கும் விருந்தினரை கையசைத்தும், கைகுலுக்கியும் வரவேற்றவண்ணமிருக்கிறார்-அடேயப்பா! எத்தனைக் கூட்டம்!

## கௌரவத்திற்கு உரிய தலைவர்

இந்த கௌரவத்துக்குரிய தலைவர் வேறு யாருமல்ல, தமிழ் நாட்டின் முதலமைச்சர் மாபெரும் சொல்லாற்றல் மிக்கவர், சிந்தனையாளர், எழுத்தாளர் திரு. சி, என். அண்ணாதுரை அவர்களே-

தமிழர் வாழுமிடமெல்லாம் அண்ணா என்பது ஒரு மந்திரச் சொல் லாகும்; அவர்கள் அவரை அத்தனை தூரம் அறிவார்கள்; அந்த அளவு நேசிக்கிறார்கள். உள்ளம் சூடேறுகிறது. சுற்றுச் சூழலெல்லாம் புத்துணர்வு; பந்தபாச உணர்வு மண்டபத்தை நிரப்பியுள்ளது, கூடியிருந்தோர் சிரித்து மகிழ்கிறார்கள். காமிராக்கள் இடைவிடாமல் பளிச்சிடுகின்றன.

அண்ணா என்ற சொல், மந்திரம்தான். அதில் சந்தேகமில்லை, இல்லையென்றால் அவரைப் பார்க்கவும், அவரோடு சில பேசவும் நானூறு மைல்களுக்கப்பாலிருந்தா மக்கள் வருவார்கள்?

அண்ணா ஒரு புதிய தலைமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

''இருபது ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணாவை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் இன்றேனும் உலகத்து அரசியலார் நம் அண்ணாவைப் புரிந்துகொள்கிறார்களே என்று என்னுள் ஓர் மகிழ்ச்சி ஏற்படுகிறது'' என்று ஒரு தமிழ் மாணவர் மற்றொரு தமிழ் மாணவரிடம் அந்த வரவேற்பு மண்டபத்தில் கூறினார்.

### உலகத் தமிழர்களின் தலைவர்

அண்ணா ஒரு தனிக்கட்சியைச் சார்ந்த ஒருதனிமனிதரல்ல. எல்லா தமிழர்களுடைய ஏகத் தலைவர் அவர். தமிழ் நாட்டின் சமுதாய சீர்திருத்தத்திற்கு நாடகக் கலைக்கு பத்திரிகை உலகிற்கு இலக்கிய உலகத்திற்குஅவர் ஆற்றியுள்ள பணிகள் ஏராளம்.

சுயமரியாதையோடுகூடிய தமிழ்த் தேசம் விழித்தெழ பெரியார் ராமசாமியோடு சேர்ந்து நேரிடையாகவும் மறைமுகமாகவும் அவர் ஆற்றியப் பணிகள் குறிப்பிடத்தக்கவை. தமிழ்மக்கள் அவர்கள் நியூயார்க்கிலிருந்தாலும் நியூஜிலாந்திலிருந்தாலும் அவரை எப்படி மறக்கமுடியும்.

**அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் விழாவையொட்டி ஆங்கிலத்தில் மலர் ஒன்றை வெளியிட்டுள்ளார் திரு. ஏ. பி. ஜனார்த்தனம். அதில் அமெரிக்காவிலுள்ள மின்னசோட்டா பல்கலைக் கழக பேராசிரியர் எம்.எஸ். உதயமூர்த்தி, அண்ணாவின் அமெரிக்க விஜயம் பற்றி அரிய கட்டுரை யொன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு இடம் பெற்றுள்ளது;**

அந்த வரவேற்பு மண்டபத்தில் நின்றிருந்த நான் ஒரு கணம் என் கண்களை மூடிக் கொண்டேன், அங்கே இருந்தபடாடோபக் காட்சிகள் மறைகின்றது. அலங்கார விளக்குகள் மறைகின்றன, என் கையிலிருக்கும் மதுக் கிண்ணம் மறைகிறது.

இப்போது நான் இருப்பது கும்பகோணம்: அந்நகரின் பூங்காக்களில் ஒன்று. நேரம் இரவு 9, 9-30 10, என்று ஓடிக் கொண்டிருக்கிறது: மழைதூற ஆரம்பித்தது, மணி 10-30 இருக்கும், அண்ணா அங்கே வந்தும் சேர்ந்தார், அப்போது மக்கள் அங்கே நின்றிருந்தார்கள்: அவர்களில் சிலர் கைகளில் குடை பிடித்திருந்தார்கள். அநேகர் துப்புர நனைந்திருந்தார்கள்.

அண்ணா பேசுகிறார் ''குடைகளை மூடுங்கள் நனைவதென்றால் நாம் அனைவரும் சேர்ந்து நனைவோம்'' அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை மந்திரத் தன்மை. எல்லோரும் குடைகளை மூடினர். இரவு நெடுநேரம் ஆனபடியால் மழையில் நனைந்தபடியே அண்ணாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மற்றோர் காட்சி: நற்ற மெடுத்த சிறிய மண்சட்டி மட்டுமே துணையாகக் கொண்டு தனிக் கொட்டடியொன்றில் அடைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்கள் அந்த சைதாப்பேட்டை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

### மக்கள் கட்டுப்பட்டனர்

அன்று அந்த விடுதலைக்குப் பிறகு அவர் பேசுவதை கேட்க மெரீனா கடற்கரையிலே மக்கள் என்றுமில்லா கூட்டமாகக் கூடியிருந்தனர், 'என் ஆதரவாளர்களை எவ்விதகட்டுப்பாட்டுணர்ச்சியுமின்றி வளர்த்துவிட்டதாக என்னைப் பார்த்துக் குற்றம் சாட்டுகிறார்கள் சிலர். எங்கே ஒரு நிமிடம் எல்லோரும் மவுனமாக எழுந்து நில்லுங்கள், அப்படியே அமைதியோடு உட்காருங்கள்'' அண்ணா தம் சுட்டு விரலை நீட்டுகிறார். அந்த சுட்டு விரலுக்குத்தான் எத்தனை மந்திரத் தன்மை, ஓர்கடல் அலைபோல் அத்தனை மக்களும் எழுந்திருக்கிறார்கள் அமைதியோடு மீண்டும் அமர்கிறார்கள். நம் முடலினூடே மின்கதிரின் பாய்ச்சலை நம்மால் உணர முடிகிறது.

நியூயார்க் வரவேற்பில் கவர்ச்சியும் காட்சியும் மிகுந்திருந்தது. ஆனால் கும்பகோணத்தில் எல்லாம் எளிமையின் உருவாய் திரண்டிருந்தது. மரீனாவில் எண்ணிக்கை எண்ணமுடியாததாக இருந்தது. ஆனால் அன்பை பாசத்தை, மரியாதையினைப் பொறுத்த மட்டில் மரீனா எந்த அளவிலும் கும்பகோணத்தைவிட தாழ்ந்திருக்கவில்லை,

### மூன்று கோணங்கள்

அண்ணாவின் அமெரிக்க விஜயம் அவரை மூன்று கோணங்களில் நமக்குக்காட்டியது. மொழி, உடை, உணவு. உடை வகையில் அவர் உடுத்திருந்த மேற்கத்திய அங்கிகளும் காலணிகள் அவருக்கு தொல்லை கொடுத்தன.

உணவு வகையில் காரமோ மணமோ இல்லாத அமெரிக்க உணவு அவரைத் திக்குமுக்காடச் செய்தது. ஆனால் மொழியைப் பொறுத்த மட்டில் அவரே எஜமானராக விளங்கினார்.

தமிழில் வல்லவர்களாக இருப்பவர்கள் தங்கள் கருத்துக்களை ஆங்கிலத்தில் எடுத்தியம்பும்போது அத்தனை நாவன்மை படைத்தவர்களாகஇருப்பதுவழக்கமில்லை. அண்ணா ஒரு விதி விலக்கு,

ஒருமுறைமாநிலங்களவையில் அண்ணா உரை நிகழ்த்தினார், அது அத்தனை சிறப்பாக இருந்தது. குடியரசுத் தலைவரின் உரையை பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக அண்ணாவின் உரையைப் பற்றிப் பேசினர். இது 1962ல் நடந்தது, ஒருக்கால் அது அண்ணா முன்கூட்டியே தயாரித்த பேச்சாக இருந்திருக்கக்கூடும்.

### பேராசிரியர்
## எம். எஸ். உதய மூர்த்தி

### அமெரிக்க செய்தியாளர் வியப்பு

ஆனால் இங்கே அமெரிக்காவில அண்ணா ஆங்கிலத்தில் அவ்வப்போது அளித்த பதில்கள் நேருக்கு நேர், சரளமாக அடுக்கு நடையில் வெளிவந்தன, இவர் ஆங்கிலத்தை எங்குதான் கற்றாரோ, என்று அமெரிக்கச் செய்தியாளர்களெல்லாம் வியந்து பாராட்டினர்,

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றிய ஒருகேள்வி 'அபோர்ஷனிங்' தமிழகம் சட்ட சம்மதமுடையதாகச் செய்யுமா? என்றகேள்விக்கு 'அபோர்ஷன்? வீ? அபோர் அபோர்சன்' (கருச்சிதைவா நாங்கள் அதை அருவருக்கிறோம்) என்று அண்ணா பதிலளித்தார்கள்.

மற்றொரு நேரத்தில் இந்தியாவைப் பற்றிய உண்மைகள் ஒரு செய்தியாளரால் திரித்துக் கூறப்பட்டதாகச் சொல்லப்பட்ட போது ''இந்த கரஸ்பாண்டண்ட்ஸ் யார்?'' அவர்களது ஏடுகளோடு தானே அவர்கள் கரஸ்பாண்ட் செய்கிறார்கள்? இதனால் அல்லவா அந்த ஏடுகளில் அவர்கள் ஓன் கரஸ்பாண்டன்ட்'' என்று போடுகிறார்கள். ஆகவே அந்த செய்தியாளர் உங்கள் செய்தியாளர் அல்ல என்றாகிறது, தமது ஏட்டின் கருத்துக்களை பிரதிபலிக்கவே 'கரஸ்பாண்ட்' செய்கிறார்'' என்று கூறினார்.

### நகைச் சுவை

மற்றொரு நேரம் வாஷிங்டனில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அண்ணா அவர்கள் தமக்கே உரிய நகைச்சுவையோடு பதிலளித்தார்கள், ''எங்கள் நாட்டை எந்தெந்த வகையில் வளமடையச் செய்யலாம் என்பது பற்றிய உங்களது எண்ணங்களை எனக்கு எழுதுங்கள். அதற்காக அமெரிக்காவிலே விண்முட்டும் மாளிகைகள் இருக்கின்றன என்று எழுதாதீர்கள், அவற்றை எங்களால் அடைய முடியாது, தக்கவை பற்றி எழுதுங்கள், செழிப்படைந்த இந்த அமெரிக்காவிலும் ஐந்து ஆசிரியர்களுக்கு நான்கு நாற்காலிகள் இருக்கக் கண்டேன், நான்கு நாற்காலிகளுக்கு மூன்றே கால்கள் இருக்கக் கண்டேன்'' என்று அண்ணா அவர்கள் பதிலளித்தார்கள்,

### மற்றவர் தேவைக்கு மதிப்பு

மற்றவர்கள் தேவை என்ன என்பதையே முதல் நிறுத்தி அண்ணா அவர்கள் நடந்து கொள்கிறார்கள். அவரோடு நின்று படமெடுத்துக் கொள்ள வேண்டும், என்று விரும்பிய போதெல்லாம் சில படங்களை எடுக்கும்படி அவர் புகைப்படக்காரரை கேட்டுக்கொண்டார்.

அண்ணா அவர்கள் பல நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பட்டார், அவைகளில் பல சங்கடமானவைகளாக இருந்தன. ஆயினும் அதை ஏற்பாடு செய்தவர்களுக்கு அது எத்தனை பெரிய நிகழ்ச்சியாகஇருக்கும் என்று கருதி அவற்றிற்கு சம்மதித்தார்.

அதிகாரத்திற்குரிய ஆணவமோ, திமிரோ, அவரை ஒரு துளியும் அண்டக்காணோம். உண்மைச் சொல்வதென்றால், வெளிநாடொன்றிலிருந்து வந்து சதா சர்வ காலமும் புகைப்படம் எடுக்கப்பட்டும் மற்றவர்களால் பார்க்கப்பட்டும் வருகிற ஒரு பெரிய மனிதராக இருப்பதற்கே அவர் கூச்சப்பட்டார். ஒரு சாதாரணமான மனிதனாக வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று அவர் விழைந்தார், ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதில் அண்ணா ஒரு நண்பனாக, எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்தார்.

## தீபாவளியன்று 'நீதியின் நிழல்'

இலங்கை வானொலியிலும் இலங்கையின் பல் வேறு பாகங்களிலும் அரங்கேற்றப்பட்ட இலங்கை தேசிய கலா நிலையத்தின் ''நீதியின் நிழல்'' என்னும் வரலாற்று நாடகம் தீபாவளியன்று எட்டியாந் தோட்டை கராகொட முஸ்லிம் பாடசாலையில் மேடையேற இருக்கிறது.

சிங்கள சினிமா நடிகை ஸ்ரீயானி ஜயசேகர கதாநாயகியாக நடிக்கும் இந்நாடகத்தில் எம்.எம்.ஏ. லத்தீப், டீ. கலைதாசன், பீ. ஏ. மோகன், ஏ. செல்லையா, என். எம். ரவீந்தர், ஸ்ரீ கணேஷ், விஜயரட்ணம், கனகசூரியன், நெய்னார், ஹம்ஸா, ஆர். மணிமேகலை சிக்கந்தர் ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வுப் பிரச்சினையில்

# வழமையான 'சேவை மூப்பு' முறை இவ்வாண்டு புறக்கணிக்கப் பட்டதேன்?

## பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்!

**அண்மையில் நிறைவேற்று எழுது வினைஞர் சேவையின் முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்ட 36 பேரில் இருவர் மட்டுமே தமிழர்கள் என்பது தெரிந்ததே. இதன் காரணமாக தமிழ் அரசாங்க ஊழியர் வட்டாரத்தில் பெரும் அதிருப்தி நிலவுகிறது. இப்பதவி உயர்வுகள் சம்பந்தமாக வட்டுக் கோட்டை பா. உ. வும் தமிழரசுப் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் இம்மாதம் 8ந் திகதி உரை நிகழ்த்தினர். அவ்வுரை முழுமையாக இங்கு இடம் பெறுகிறது.—**

"பொது எழுது வினைஞர் சேவையிலிருந்து நிறைவேற்று எழுது வினைஞர் சேவையின் முதலாந்தரத்துக்கு அண்மையில் நிகழ்ந்த பதவி உயர்வு குறித்து நிதியமைச்சரிடம் ஒரு கேள்வியெழுப்ப விரும்புகிறேன். இப்பதவி உயர்வுகள் எழுது வினைஞர் சேவையிலீடுபட்டுள்ளவர்களிடையே மிகுந்த வெறுப்பையும். எரிச்சலையும் ஏற்படுத்தியிருக்கின்றன. வழக்கமாக ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்ற பொது எழுதுவினைஞர் சேவைச்சங்கம் லிபிகரு சங்கம், அரசபங்க எழுது வினைஞர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் இப்பதவி உயர்வுகளை வன்மையாக கண்டித்துள்ளன.

"உண்மையில், இந்த ஆண்டுப் பதவி உயர்வுகள், வழமையான ரீதியிலும், வழமையான பதவி உயர்வுத் திட்டப்படியும் நடைபெறவில்லை. அத்துடன் இப்பதவி உயர்வுகள் எழுது வினைஞர் சேவைக் குறிப்புக்கும் முரண் பட்டதென்று நான் கருதுகிறேன்.

### சேவை மூப்பு

ஏனெனில் நற்பண்புகளையும் சேவை மூப்பு முறையையும் ஆராய்ந்து நிறைவேற்று எழுது வினைஞர் சேவையின் முதலாம் தரத்திலிருந்து விசேட தரத்துக்கு பதவி உயர்வுகள் அளிக்கப்படுவது போலன்றி நிறைவேற்று எழுது வினைஞர் சேவையின் இரண்டாவது தரத்திலிருந்து முதலாவது தரத்துக்கு பதவி உயர்வு அளிக்கப்படும்போது சேவை மூப்பு முறையே பொதுவாக ஆலோசிக்கப்படுகிறது. கரும்புள்ளியுடையவர்களின் பிரச்சினையில் மட்டுமே இந்தமுறை விதிவிலக்காகிறது.

"அந்தரங்க அறிக்கையில் எவ்வித பாதகமான குறிப்புக்களும் இல்லாதவர்களும் வினைத் திறமைகாண்தடைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுமான இரண்டாவது தரத்தைச் சேர்ந்த யாவரும், சேவை மூப்பு முறையைப் பின்பற்றி இரண்டாவது தரத்திலிருந்து முதலாவது தரத்துக்கு உயர்த்தப்பட்டு வந்திருக்கிறார்கள்.

### அலட்சியப்படுத்தப் பட்டனர்

"ஆனால் இந்த ஆண்டு ஏதோ ஒரு காரணத்துடன், வேறு விதமான திட்டம் ஒன்று கையாளப்பட்டிருக்கிறது. இதனால், பெருந்தொகையான மூத்த அதிகாரிகள் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

"நான், சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர் சேவைக் குறிப்பை கையுடன் வைத்திருக்கிறேன். உண்மையில் நான் ஏற்கனவே பதில் நிதியமைச்சரைச் சந்தித்து இது சம்பந்தமாக எழுது வினைஞர்களிடையே ஏற்பட்டுள்ள மனத்தாங்கலை அவரது கவனத்துக்கு கொண்டு வந்து விட்டேன். சம்பந்தப்பட்ட எழுது வினைஞர் சேவைக் குறிப்பு பின்வருமாறு கூறுகிறது:

"நிறைவேற்று எழுது வினைஞர் வகுப்பைச் சேர்ந்த இரண்டாவது தரத்திலுள்ள ஓர் உத்தியோகத்தர் முதலாவது தரத்துக்கு பதவி உயர்வு பெறும் தகுதியுடையவர்



என்று கருதப்படுவாரானால் அவ்வுத்தியோகத்தர் அப்பொறுப்பினை ஏற்கத் தகுதியுடையவர் என்பதையும் தனக்கு கீழ்ப்பட்ட எழுது வினைஞர்களின் வேலைகளை மேற்பார்வையிடவும் பணிக்கவும் கூடியவர் என்பதையும் பற்றிய விசேட குறிப்புகளுடன், அந்தரங்க ஆண்டறிக்கையில் பொருத்தமான சிபார்சுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது தரத்திலிருந்து முதலாந் தரக்துக்கு பதவி உயர்வு அளிக்கும் போது அத்தகைய தகுதிகளுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்"

### வித்தியாசம்

"இவை மட்டும் தான். ஆனால் முதலாவது தரத்துக்கு பதவி உயர்வு அளிப்பதற்குரிய முறைகளுக்கும் விசேட தரத்துக்கு பதவி உயர்த்துவதற்குமுள்ள முறைகளுக்குமிடையேயான வித்தியாசத்தை அமைச்சருக்கு சுட்டிக்காட்டுவதற்காக சம்பந்தப்பட்ட குறிப்பையும் இங்கு வாசிக்கிறேன்.

நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பிலிருந்து விசேட தரத்துக்கான பதவி உயர்வுகள் திறைசேரி உபசெயலாளரின் ஆலோசனையுடன்பொதுச் சேவைக்கமிஷனுல் அளிக்கப்படும்.

இப்பதவிஉயர்வுகள் வழங்கப்படும்போது நற்பண்புகள் (Merit) சேவைமூப்பு முறை ஆகிய இரண்டுமே கவனிக்கப்படும். விசேட நற்பண்புகளின்றி, தனியே சேவை மூப்பு முறை மட்டும் பதவி உயர்வுக்கான ஒரு தகுதியாக கருதப்பட மாட்டாது".

"முதலாம் தரத்திலிருந்து விசேட தரத்துக்குப் பதவி உயர்வு விடயத்தில் மட்டும் தான் ஏதாவது விசேட நற்பண்புகள் ஆலோசிக்கப்பட வேண்டும். ஆனல் இன்றுவரை பின்பற்றப்பட்டு வந்த வழமை என்னவெனில், சேவை மூப்பு முறைக்கு ஏற்றபடி உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதே. எனவே நான் நிதியமைச்சரைக் கேட்டுக்கொள்வேன்- இப்பிரச்சினையை ஆராய்ந்து அதிருப்தியின் காரணத்தை அகற்ற நடவடிக்கை எடுங்கள்!

"திறைசேரிச் சுற்றறிக்கை 700ன் கீழ் பழைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சில சலுகைகளை அண்மையில் நடந்த பதவி உயர்வுகளின் மூலம் பறிக்கப்பட்டுவிட்டதென்ற ஒரு மனக் குறை பொதுச் சேவையிலீடுபட்டுள்ள அரசாங்க ஊழியர்களில் ஒரு பகுதியினரிடையே ஏற்பட்டிருக்கிறது.

பழைய ஊழியர்கள்என்று கணிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினருக்கு 700-வது இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டிருந்த சில இலாபங்களை அவர்கள் அடைய முடியாதபடி திறைசேரியிலுள்ள சில அதிகாரிகள் இத்திட்டத்தை முறியடித்து வருகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இப்பிரச்சினையை ஆராய்ந்து இவ்வரசாங்க ஊழியர்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி நான் நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

## புனித நகர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி]

**புனிதநகராக்க முடிவு செய்வதால் இந்துக்களின் மனதைத் திருப்திப் படுத்திவிடவும் முடியாது; அவர்களின் ஆதரவை பெற்றுவிடவும் முடியாது. இதைத்தான் பிரதமருக்கு திட்டவட்டமாக கூற விரும்புகிறோம்.**

### பொறுத்துப் பார்ப்போம்

பிரதமரால் புதிதாக நியமிக்கப்பட்ட குழுமுற்றுமுழுதாக அரசாங்க அதிகாரிகளைக்கொண்ட ஓர் குழுவாகும்.

பொதுவாக அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்தின் கருத்தையே பிரதிபலிப்பவர்கள். அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு மாறுபட்டு சுயமாக தமது கருத்துக்களை வெளியிடத் தயங்குபவர்கள்.

திருமலைப் புனித நகர்ப் பிரச்சினையில் அரசாங்கத்தின் கருத்து ஓரளவு இதுவரை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. புனிதநகராக்கும் திட்டத்தை அரசாங்கம் மனமுவந்துவரவேற்கவில்லையென்பது தெளிவாக்கப் பட்டுவிட்டது.

இந்நிலையில் பிரதமர் நியமித்துள்ள அரசாங்க அதிகாரிகளைக்கொண்ட குழு எப்படி செயல்படுகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## இ. போ. ச. விலும்

(1-ம் பக்க தொடர்ச்சி)

பலதரப்பட்ட பிரயாணிகளும் வந்து சந்திக்கும் ஓர் இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போல கொழும்பு புறக்கோட்டை பஸ்தரிப்பு நிலையத்திலும், இன்னும் பல்வேறு இடங்களிலும் தனிச் சிங்களமே திடீரென்று குடிகொண்டுள்ளன. இ.போ.ச.வின் இத்திடீர்ப் போக்குக் குறித்து தமிழ் மக்கள் அதிக கவலையும் கஷ்டமும் அடைந்துள்ளனர்.

---

## அறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும்.

"இலங்கைத் தமிழர்கள் நாய்கள் போலத் தாக்கப்பட்டபோதெல்லாம் சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தி அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர் தி. மு. க. தலைவர்கள்.

"ம. பொ. சி. யும் இலங்கைத் தமிழர்களுக்காக பலமுறை குரலெழுப்பியுள்ளார்.

'இதையெல்லாம்தெரிந்து கொள்ளாமல் இலங்கைத் தமிழர்களுக்காக யாருமே அனுதாபம் தெரிவிக்கவில்லையென அதுவும் தி. மு. க. பிரமுகரிடமே திரு. பொன்னம்பலம் கூறியிருப்பது உண்மையில் [illegible] மாகும்' —இவ்வாறு அப்பிரமுகர் தெரிவித்தார்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அரசாங்கத்துடன் இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பதேன்?

“தமிழினத்துக்கு டட்லி அரசாங்கம் பாதகமாக நடக்கிறது. அநீதியான, பாரபட்சமான சட்டங்களால் தமிழர்களின் குரல் வளையை பிடித்து நெரிக்கிறது, என்றெல்லாம் அண்மைக் காலமாக வடமாகாண மேடைகளில் உச்சஸ்தாயி குரலெடுத்து முழங்கி வந்த தாங்கள், அப்படிப்பட்ட அரசாங்கத்திலிருந்து வெளியேறுமல் இன்னும் தொங்கிக் கொண்டிருப்பதேன்?

## அரைச் சபாநாயகர் பதவியும் பறிபோய் விடுமென்ற அச்சமா?

### உடுப்பிட்டி எம்.பிக்கு கரவெட்டிப் பிரமுகர் கேள்வி!

கிடைத்த அரைச்சபாநாயகர் பதவியில் அட்டைபோல ஒட்டிக் கொண்டிருக்கிறீர்களே! தமிழினத்தை உதைத்து விட்ட டட்லியின் கால்களுக்கு இன்னும் முத்தம் கொடுப்பது தமிழ்மக்களுக்கு செய்யும் படுதுரோகமல்லவா?

“அரைச் சபாநாயகர் பதவிக்காக தமிழினத்தை விலை கூறிவிற்காதீர்கள். தமிழினத்தின் மானம் மரியாதையைக் காக்க வேண்டும் என்ற அற்ப சொற்ப ஆசையாவது உங்களிடம் இருந்தால் அரைச் சபாநாயகர் பதவியை உடனடியாக உதறி எறிந்து விட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறுங்கள்!”

—இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி பா. உ. வுமான திரு. மு. சிவசிதம்பரத்துக்கு கரவெட்டிப் பிரமுகர் ஒருவர் எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்தில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

“அண்மைக்காலம்வரை வட இலங்கையிலே ஊர்தோறும் மேடையமைத்து, அரசாங்கம் தமிழ்மக்களுக்கு பாதகமான பல நடவடிக்கைகளையெடுத்து வருகிறதென்றும், தமிழரசுக் கட்சி அதற்கெல்லாம் ஆமாம் சாமி போட்டபடி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதாகவும் இதனுல் தமிழரசுக்கட்சி தமிழ்மக்களுக்கு படுதுரோகம் புரிந்து வருவதாகவும் நீங்கள் குற்றம் சாட்டிய வேளையிலும் சரி, இன்றும் சரி, நீங்களும், உங்கள் குருநாதரும் மற்ற சிவசிதம்பரமும் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டுதானிருக்கிறீர்கள்.

“கோணேஸ்வரப் பிரச்சினை மீது தமிழ்மக்களின் தன்மானத்தைக் காப்பாற்றும் பொருட்டு தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி ஒரு மாதம் கழிந்து விட்டது. ஆனுல் நீங்களும் உங்கள் கட்சியும் மட்டும் இன்னும் அரசாங்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

“நீங்களே உங்கள் வாயாலே பல மேடைகளில் கூறியபடி தமிழ் மக்களுக்கு படுதுரோகம் புரியும் டட்லி ஆட்சியுடன் இன்னும் சல்லாபம் செய்து வருவது ஏன்?

“தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுமலிருந்தபொதுயாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசிய நீங்கள் அதற்கு ஒரு இரகசியக்காரணம் இருப்பதாக ‘சஸ்பென்ஸ், வைத்துப்பேசினீர்கள். ஆனுல் உங்கள் அந்தப்புழுகு இன்று நாட்டுமக்களுக்கு தெரிந்துவிட்டது.

நீங்களும் உங்கள் கட்சியும் அரசாங்கத்திலிருந்து வெளியேறுமலிருப்பதற்கு ஏதாவது “இரகசிய” காரணம் இருக்கிறதா என்று இன்று மக்கள் கேட்கிருர்கள்.

கேவலம், அரைச் சபாநாயகர் பதவி போய்விடுமென்பதற்காக அருமைத்தமிழினத்தை விலைகூறி விற்கத் துணியாதீர்கள்! தமிழினத்தின் மானத்தை சிங்கள ஆட்சியின் காலடியில் போட்டு நசுக்க இடம் தராதீர்கள்;

‘அரசியலில் கொஞ்சமாவது மானம் சூடு சுரணை இருந்தால், அன்னைத் தமிழுக்கு அவமானம் தேடித்தராமல் அரைச் சபாநாயகர் பதவியைஉடனேஉதறித்தள்ளுங்கள். அரசாங்கத்திலிருந்து உடனடியாக வெளியேறுங்கள். உடுப்பிட்டி தொகுதிமக்களின் கண்ணியத்தைகாப்பாற்றுங்கள்.




## தமிழும் ஆங்கிலமும் தமிழருக்கு போதும்

### என்கிருர் டாக்டர் மு. வ.!

“தமிழர்கள் அறிவு வளர்ச்சிபெற தாய்மொழியான தமிழையும், மற்றவர்களின் கருத்தை அறிந்துகொள்ள ஆங்கிலத்தையும் அறிந்துகொண்டால்போதும்! மூன்ருவது மொழி தமிழர்களுக்கு தேவையில்லை!”

—இவ்வாறு பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் அண்மையில் செங்கற்பட்டில்நடைபெற்ற தமிழகப் புலவர் குழுவின் வெள்ளி விழாக் கூட்டத்தில் பேசுகையில் கருத்தறிவித்தார்.

டாக்டர் வரதராசனுர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாடு - மொழி - மக்கள் என்ற மூன்றில், நாட்டையும்-மக்களையும் இணைப்பது மொழிதான். தாய் மொழிக்கு நாம் முதலிடம் தர வேண்டும். இதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

“மக்கள் ஆட்சி தொடர்ந்து நீடிக்குமானுல்-சனநாயகம் தொடர்ந்து இருந்தால்-நிச்சயமாக எதையும் தாய் மொழியில் படிக்கும் நிலை வந்தே தீரும்! எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், தாய் மொழிக்கு முதலிடம் தராத நாடே இல்லை!

“ஒருவன் எவ்வளவுதான் பாடுபட்டாலும் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமானுல், அதை அவன் தாய் மொழியின் மூலம்தான் பெறமுடியும்.”

“மாற்ருர் கருத்துக்களை அறிய துணைமொழி தேவை; அதற்கு ஆங்கிலம் வேண்டும்.

நம்முடைய கருத்துக்களை நாம் சொல்லும்போது தமிழில்தான் சொல்லவேண்டும்; அந்தத் தெளிவு நம்மிடையே பிறக்கவேண்டும்.

மற்ற மொழிக்காரர்கள், ஆங்கில அறிவு பெற்றவர்களின் கருத்தை உணர ஆங்கிலம் வேண்டும்.

என் கருத்தை நான் சொல்லவேண்டும் என்ருல், தமிழில்தான் சொல்வேன்; ஆங்கில அறிவாற்றல் எனக்கு இருந்தாலும், என் மொழி தமிழ் - என் நாடு தமிழ் நாடு - ஆகையால் நான் தமிழில்தான் பேசுவேன்.

அறிவு வளர்ச்சிபெற தாய்மொழியான தமிழும், மற்றவர்களின் கருத்தை அறிந்துகொள்ள ஆங்கிலத்தையும், நாம் அறிந்துகொண்டால் போதும்; மூன்ருவதுமொழி நமக்குத் தேவையில்லை!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகை ஜெயலலிதாவின் திருமணம் எப்பொழுது?

## அவரே சொல்கிறார் கேளுங்கள்!

நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் 'ஜெயலலிதாவுக்குக் கல்யாணமாமே...(!?)' என்கிற விஷயம் பல பேருடைய மூளைக்கு வேலை கொடுக்கிறது.


'உங்களுக்குக் கல்யாண மாமே?' என்று கேள்வி கேட்கிறார்களே அவர்களை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கவலையோடு விசாரிக்கிறார்களா? சந்தோஷப்படுகிறார்களா? ஊகூம்... விளங்கவே மாட்டேன் என்கிறது!

நான் யாரோ நடிகரை மணந்து கொள்ளப் போவதாகவும், என் அம்மாதான் அதற்குத் தடையாக இருப்பதாகவும் எதோ 'கசமுசப்பு' தோன்றி இருக்கிறதாம்.

அப்படி எல்லாம் எதுவும் கிடையாது.

ஒன்று மட்டும் நிச்சயம்.

நான் யாரை மணந்து கொள்வதாக இருந்தாலும் என் அம்மாவை அனுசரித்துத்தான் நடப்பேன். நான் என் அம்மாவின் இஷ்டப்படிதான் நடப்பேன் என்பதால் எதோ என் அம்மாவுக்கு நான் பயந்து நடுங்கி இதைக் கூறுவதாகஅர்த்தம் செய்யவேண்டாம்.



கல்யாணம் என்பது பெரியோர்களின் வாக்குப்படி ஆயிரங் காலத்துப் பயிர். 'வாய்கால்-வடிகால்' எல்லாம் சரியாக இருக்கிறதா? என்று பார்க்கவேண்டும். ஆகவே கல்யாணம் என்பது பெரியவர்கள் நிச்சயம் செய்யவேண்டியது.

என்னைப் பொறுத்தவரையில் பெரியவர்; என் அம்மா! அவர் முடிவு செய்தால் சரிதான். அவர் முடிவே என் முடிவு. எங்கள் வீட்டில் இரண்டுவிதமான முடிவுக்கு வேலை இல்லை.

---

### கண்ண தாசனின்

# மாம்பழப் பாடல்!

இப்பொழுது வெளிவரும் தமிழ் படங்களில் கொச்சைப் பாடல்களில் ஆபாசம் மலிந்து வருவதை ரசிகர்கள் கண்டிருக்கலாம்.

எலந்த பயம், வா வாத்யாரே வூட்டாண்டே...... போன்ற பாடல்கள் வெளி வந்தவை. இன்னுமொரு புதிய படத்தில் மொல்ல மாரி......கேப் மாரி......சோமாரி சோமாரி அதிலே நீ எந்த மாரி'' என்று மனோரமா பாடுகிறார்.

'உலகம் இவ்வளவுதான்' படத்தில் இடம் பெற்றுள்ளது கீழ்க்கண்ட 'மாம்பழப்' பாடல். இப்பாடலை கண்ணதாசன் இயற்றியுள்ளார். ராஜஸ்ரீக்காக எல். ஆர். ஈஸ்வரி பின்னணிக் குரல் கொடுத்துள்ளார்.

மாவடு பாருங்க!
ஊறுகா போடுங்க
பழைய சோத்துப் பக்கம்
வச்சுப் பாருங்க
மாம்பழம் வாங்குங்க!
ஹேய் மல்கோவா
பழமுங்க
எல்லாம் வித்துப்
போச்சுங்க—
ஹேய் இருப்பது
இரண்டு தானுங்க!
வாயில் வச்சா
புளிக்குங்க—
அது பச்சையானகாயுங்க!
வட்டமான என்
பழத்தில்—
கூட்டமாகப் பாயுங்க!
உள்ளே வச்சு
வைக்கப் போட்டு
பழுக்க வைச்ச தில்லீங்க!
உச்சிமரக் கொம்பினிலே
உருண்டு வந்த பழமுங்க!
துணியைப் போட்டு
மூடினாலும்
ஊர்முழுக்க மணக்குங்க
துளையைப் போட்டு
வண்டு போயி
குடியிருக்கும் பழமுங்க
எந்தப்பக்கம்
பாக்கிறீங்க!
இந்தப் பக்கம் பாருங்க!
இலையினுள்ளே
மறைஞ்சிருக்கு
எடுத்துக்
காட்டுறேனுங்க!
தோலு கொஞ்சம்
லேசுங்க!
தொட்டுக் கொஞ்சம்
பாருங்க!
சுவையைப் பார்த்த
பின்னால
இவளைப் பார்த்துப்
பேசுங்க
பாலிலே ஊறப்போட்டு
பாயாசம் பண்ணுங்க!
படுக்கு முன்னே
குடிச்சாக்கா
ஆயாசம் திருங்க!

---

திரைவிமர்சனம்:

# பறக்கும் பாவை



மக்கள் திலகம் எம். ஜி. ஆரை வைத்து ஒரு சர்க்கஸ் படத்தை ஏன் தயாரிக்கக் கூடாது என்று சிந்தித்த டைரக்டர் ராமண்ணா, அந்தச் சிந்தனையை செயலாக்கியதால் உருவான படமே ''பறக்கும் பாவை''.

கதை ஓரளவு சஸ்பென்சுடன் செல்வதால் படம் விறு விறுப்பாக இருக்கிறது. எம். ஜி. ஆரை ஆரம்பத்தில் வெறுத்து பின்னர் காதலிககிறார் சரோஜா தேவி.

எம். ஜி. ஆர். மிகவும் 'லைட்டாக' ஒடி, ஆடிப் பாடி நடித்திருபபதுடன் நிறைய கும் கும் குத்துககள் தருகிறார். சரோஜாதேவி தனது பருவ அழகை சிறிது தாராளமாகவே காட்டுகிறார். ஆனுடையில் அவரது நடிப்பு அபாரம்.

மனோகர், அசோகன், குண்டு கருப்பையா போன்றவர்கள் எம். ஜி. ஆரிடம் நிறைய வேண்டிக் கட்டுகிறார்கள்.

பாடல்கள் இனிமையானவை:

சிறந்த பொழுது போக்குப்படம் பறக்கும்பாவை. இப்பொழுது சினிமாவில் திரைகளில் காட்சி தருகிறது.

---

திரை விமர்சனம்





# இரு மலர்கள்

காதல் என்பது அணையாத நெருப்பு. அது இருவர் உள்ளத்தில் பற்றிப்பிடித்து விட்டால், எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இதயத்தின் எங்கோ ஓர் மூலையில் கனன்று கொண்டேயிருக்கும். காதல் நிறைவேறாது போனாலும் அவ்வுணர்வு ஒருபோதும் கருகிப் போவதில்லை.

இந்தக் கருத்தையடிப்படையாகக் கொண்டு உணர்ச்சி பூர்வமானதொரு கதையைப் பின்னி 'இரு மலர்களாக' தொகுத்துள்ளார். திருலோகசந்தர்.

படத்தில் மூன்றே மூன்று முக்கியபாத்திரங்கள். சிவாஜி கணேசன் கதாநாயகனாகவும் அவனைக் காதலிக்கும் இரு பெண்களாக பத்மினியும் விஜயாவும் நடித்திருக்கின்றனர். மூவரது நடிப்பும் ஒருவரையொருவர் மிஞ்சுகின்றன. அப்பப்பா, அந்த நடிப்பு பார்த்து அணு அணுவாக ரசிக்க வேண்டிய ஒன்று.

நாகேஷ் — மனோரமா இருக்கவே இருக்கிறார்கள் சிரிக்க வைக்க. பாட்டுக்கள் அத்தனையும் இனிமை சொட்டுகின்றன. திருலோகசந்தரின் கைவண்ணம் படம் முழுவதும் தெரிகிறது.

உயர்ந்த ரகப் படங்களின் வரிசையில் இடம் பெறும் 'இருமலர்கள்' சிந்தும் நறுமணத்தை சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் ஒவ்வொருவரும் நுகர வேண்டியது அவசியம்.

---

# திரைவாணன் பதில்கள்

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.

கே: என்தம்பி'' படத்தில் படத்தில் வரும் சிறப்பான அம்சம் என்ன?

ப; சிவாஜி ஏற்றிருக்குப் புதுமைப்பாகம்தான் இந்தப் படத்தின் முதுகெலும்பு!

ஃ

ப. சோமசுந்தரம்
குப்பிழான்.

கே: நடிகர்திலகம் நடித்து தென்னகத்தில் அடுத்து வெளிவரவிருக்கும்படங்கள் எவை?

ப: எங்க ஊர் ராஜா! உயர்ந்த மனிதன்!

ஃ

ஐ. நடேசன்
நெல்லியடி.

கே: ஜெய்சங்கருடன் கே. ஆர்.விஜயா ஜோடி சேர்ந்து நடிக்கப் போகிறாராமே?

ப: நடித்து வருகிறார்-வீரப்பா தயாரிக்கும் படத்தில்!

ஃ

பொ. நவரெட்னம்
பாண்டியந்தாழ்வம்.

கே: 'கலாட்டா கல்யாணம்'' சென்னையில் எத்தனை நாட்கள் ஒடியது?

ப: 100 நாட்களுக்குஅதிகமாக ஓடியது!

ஃ

வி. குனேஸ்வரி
கைதடி வடக்கு.

கே: கே.ஆர். விஜயாவின் முகவரி என்ன?

ப: 1, முதல்மெயின் ரோடு ராமகிருஷ்ணு நகர், அண்ணுமலைபுரம், சென்னை-28.

ஃ

செல்வா அன்பன்
நாவலப்பிட்டி.

கே: தில்லாணு மோகனும்பாள் சிவாஜியின் வெற்றிப் படமா? நூறு நாட்கள் ஓடுமா?

ப: கண்டிப்பாக ஓடும்! வெற்றிப்படமே!

ஃ

சுந்தரம்பிள்ளை
மல்லாகம்.

கே: ஜெய்சங்கர் நடித்த படங்களில் எத்தனை படம் 100 நாட்கள் ஓடியுள்ளன?

ப: குழந்தையும் தெய்வமும், யார் நீ, பட்டணத்தில் பூதம் ஆகிய மூன்றும்!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை
தாழங்குடா;

கே: எம். ஜி. ஆர். குரல் மாறிவிட்டதா?

ப: மாறிவருகிறது!

ஃ

ம: தர்மராசா
யாழ்ப்பாணம்.

கே: கே. ஆர். விஜயாவை திருமணம் செய்யப் போகிறேன். நீர் அதற்கு உதவி செய்வீரா?

ப: வேலாயுதன் நாயருடன் மோதிக்கொள்ள தயாராக இருக்கிறீரா?

ஃ


எதிர் மன்னசிங்கம் தம்பதிகள்,
கல்லடி முகத்துவாரம்.

கே: சிவாஜிக்கு எத்தனை பிள்ளைகள்?

ப: நான்கு!

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். சரோஜாதேவி
அசோகன், நம்பியார், ஜி. சகுந்தலா
—நடிக்கும்—

# பறக்கும்பாவை


(ஈஸ்மன் கலர்)

## 6-வது வாரம் கெப்பிட்டல் (கொழும்பு)

# நான் ஆணையிட்டால்

# 2-வது ஜனத்திரள் வாரம்!!

சென்ட்ரல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை)



* ஜெமினிகணேசன் * சரோஜாதேவி
* விஜயகுமாரி * பண்டரிபாய்
*வி. கே. ராமசாமி * தங்கவேலு
* சோ * கருணாநிதி
மற்றும் பலர் —நடித்த—
ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்


# பெண் என்றால் பெண்

## விரைவில் எதிர்பாருங்கள்!!

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, முத்துராமன், விஜயகுமாரி, நாகேஷ், மனோரமா, எஸ். எஸ். லட்சுமி, சான்டோ சின்னப்பாதேவர், —நடித்த—
தேவர் பிலிம்ஸ் தேர்த்திருவிழா

# ஜனத்திரள் மிகுந்த திரைகளில் காட்சிதருகிறது!!

செல்லமகால் (கொழும்பு) ஈரொஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) பேர்ஸ் (சிலாபம்) றிகல் (கண்டி)
கிங்ஸ் (பதுளை) சிறிலங்கா (வென்னப்புவ) ஸ்ரீ முருகன் (ஜிந்துப்பிட்டி)
அக்டோபர் 24 முதல் வின்ஸர் (யாழ்ப்பாணம்)



சிவாஜிகணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, நாகேஷ்
—நடிக்கும்—

# இருமலர்கள்

கெயிட்டியில் இப்பொழுதுகாட்சிதருகிறது
★ ஜெமினி ★ சாவித்திரி ★ ஈ. வி. சரோஜா ★ நம்பியார் -நடிக்கும்-

# கற்புக்கரசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ.இலக்கத்தில் 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411